Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | பங்குனி-15 | 28-03-2005 | திங்கட்கிழமை | ஓசை 38




## சிறிலங்கா சிறப்புப் படையினரால் இரு பொதுமக்கள் சுட்டுக்கொலை!

### மட்டு. குடும்பிமலைச் சம்பவத்திற்குப் புலிகள் கண்டனம்

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான குடும்பி மலையில் நேற்று முன்தினம் இரவு அப்பாவிப் பொது மக்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இது சிறிலங்கா சிறப்புப் படையணியின் நடவடிக்கையே எனச் சந்தேகிக்கப்படுவதாக விடுதலைப்புலிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மட்டு அம்பாறை அரசியல் துறைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் குடும்பி மலை பிரதேசத்தில் நேற்று முன்தினமிரவு அப்பாவிப் பொது மக்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இப் பிரதேசத்தில் நீண்ட காலமாக இரவு வேளைகளில் இயற்கை வளங்கள் (மணல், மரம்) களவாடப்பட்டு வருகின்றதை அறிந்த மக்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.கணபதிப்பிள்ளை கிராமத்தில் இளைஞர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடி, கணபதிப்பிள்ளை கிராமத்தில் நேற்று மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் இளைஞரொருவர் பலியாகியுள்ளார்.

இவர் வசமிருந்த தேசிய அடையாள அட்டை மூலம் இவர் கண்ணன்குடா கொத்தியாபுலவைச் சேர்ந்த நடராசா சுவேந்திரன் (வயது 26) என அடையாளம் காணப்பட்டுள்ளார். வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்த சமயம் உந்துருளியில் வந்த நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு தப்பிச்சென்றுள்ளனர். கொலையாளிகள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

### எம்மைச் சீண்டுவது தொடருமானால்

# தீர்க்கமான முடிவொன்றை தலைவர் விரைவில் எடுப்பார்

### அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்

**சிறிலங்கா அரசு எங்களுடைய விடுதலை அமைப்பையும் மக்களையும் பல வீனப்படுத்துகின்ற முயற்சிகளில் தொடர்ந்து தீவிரமாகச் செயற்படுமானால் நிச்சயமாக தலைவர் மிக விரைவில் ஏதோ ஒரு தீர்க்கமான முடிவை எடுப்பார் என நான் கருதுகின்றேன் என தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

நேற்று ஐ.பி.சி.க்கு நேயர்களுடனும், மக்களுடனும் கருத்துக்களை பகிர்ந்து கொண்ட வேளை அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து அங்கு அவர் கருத்து தெரிவிக்கையில்,

ஐரோப்பிய பயணத்தின் நோக்கம் எமது மக்களுடைய எதிர்பார்ப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.வாகன விபத்தில் இருபோராளிகள் சாவடைந்தனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வாகன விபத்தொன்றில் இரண்டு போராளிகள் சாவடைந்துள்ளனர்.

புகழமுதன், இறைமாறன் ஆகிய போராளிகளே சாவடைந்துள்ளதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு.அம்பாறை அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### -அரசிடம் ஒன்பது கோரிக்கைகளை முன்வைத்து-

## வடமராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் இன்று கண்டனப் பேரணிக்கு ஏற்பாடு

கரையோரத்தில் மக்கள் மீளக்குடியேறுவதற்கான அனுமதி மற்றும் உயர்பாதுகாப்பு வலயப்பிரச்சினை உள்ளிட்ட ஒன்பது அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி வடமராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் இன்று காலை கண்டணப்பேரணியொன்றை நடாத்தவுள்ளது.

காலை 10.00 மணிக்கு பருத்தித்துறை சிவன்கோயில் முன்றலில் இருந்து புறப்படும் பேரணி யாழ். பருத்தித்துறை வீதியூடாக பருத்தித்துறை பிரதேச செயலகம் மற்றும் தம்பசிட்டிப் பகுதியிலுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ்.அலுவலகம் என்பவற்றை சென்றடையவுள்ளது. அங்கு தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களை

(12ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதியில் ஆயுதக்குழுக்களின் முகாம்

### போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விசாரணை

வடகிழக்கில் சிறிலங்கா இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஆயுதக் குழுவினர் முகாம்கள் அமைத்து இயங்குவது குறித்து இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு விசாரணை நடத்தி வருகிறது.

இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள அக்குழு, சிறிலங்கா இராணுவத்தின் இத்தகைய நடவடிக்கைகள் வன்மையான யுத்த நிறுத்த மீறலே என்றும் சாடியுள்ளது. போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஒலட்ஸ்டோபிர் இது குறித்து கூறுகையில், சண்டே லீடர் பத்திரிகை இந்தக் குழுக்களின் முகாம்கள் பற்றி அம்பலப்படுத்திய தகவல்கள் குறித்து உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரிவித்தார்.

இது போன்ற முகாம்கள் குறித்து தமிழீழ விடுதலைப்புலிகள் முன்வைத்த முறைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமர்-சோமவன்ச இரகசிய ஒப்பந்தம்

### சிங்கள வாரஇதழ் தகவல்

சிறிலங்காவின் வெளி வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிரகாமருக்கும் ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்கவிற்கும் இடையில் இரகசிய ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளதாக சிங்கள வார இதழ் ஒன்று

(12ஆம் பக்கம் பார்க்க)

## சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் தமிழ் மக்கள் அதனைப் புறக்கணிப்பர்

### -தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அறிவிப்பு

நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை ரத்துச் செய்தல் மற்றும் அதிகாரப் பரவலாக்கம் போன்ற விடயங்கள் தொடர்பாக சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் அதை தமிழ் மக்கள் புறக்கணிப்பார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் இந்த சர்வசன வாக்கெடுப்பை நிராகரித்துள்ளது. இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கூறியுள்ளதாவது: சந்திரிகா நடத்தும் இந்த வாக்கெடுப்பில் வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் பங்கேற்கமாட்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவமுகாமருகே நச்சுவாயு முகமூடி

### க.கா.குழுவிடம் முறையீடு

(கொழும்பு)

திருகோணமலையில் நச்சுவாயுத் தாக்குதலின் போது பயன்படுத்தக்கூடிய நவீன ரக நச்சுவாயு முகமூடி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதாக படையினர் தெரிவிகின்றனர். குச்சவெளி இராணுவ முகாம் பகுதியில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தென்னந் தோட்டம் தேவை

A-9 வீதியில் கொடிகாமம் தொடக்கம் இயக்கச்சி வரையுள்ள பிரதேசத்தில் தென்னந்தோட்டம் அல்லது அதற்கேற்ற வெற்றுக்காணி உடனடித் தேவையாகவுள்ளது. தொடர்பு அ.லோகராஜாNo:130 A,பெரியார்குளம்,பூந்தோட்டம், வவுனியா. T.P. 0244589221 (5872)

### தவறிவிட்டது

அ. கரிகாலன் (போராளி) என்பவருடைய மோட்டார் சைக்கிளின் ஆவணங்கள் N.P JG 7268 கையடக்க தொலைபேசி பிரயாணப் பையுடன் 24.03.2005 அன்று பி.ப 4.00 மணியளவில் புதுர்ச் சந்திக்கும் புளியங்குளம் சோதனைச் சாவடிக் குமிடையில் தவறிவிட்டது. கண் டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை கிளிநொச்சி/நந்தவனம் கிளி நொச்சியில் அல்லது தொலைபேசி இல. 021-2285704யுடன் தொடர்பு கொள்ளவும். (5891)

### தவறிவிட்டது

ஜெகதீஸ்வரன் ஜெயகரன் (திருநெல்வேலி யாழ்ப்பாணம்) என்ப வருடைய கடவுச்சீட்டு புளியம்பொக் கணை நாகதம்பிரான் கோவிலடியில் 25.03.2005 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் எழில்நிலா ஸ்ரூடியோ இல: 67/1 விசுவமடுவில் ஒப்படைக்கவும். தொடர்பிற்கு HP 0776623799 (5892)

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும் போட்டோக் கொப்பி, லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்து கொள்ளவும் பிள்ளையார் பொத்தகசாலை கண்டிவீதி, கிளிநொச்சி. T.P 021-2285750 (சி.11590)

### விற்பனையாகின்றது

அஸ்ரன் பதிப்பு G.C.E.O/L கடந்த கால வினாவிடை (1993-2004) புத்தகங்கள் பெற்றுக் கொள்ளவும், போட்டோ பிரதி செய்து பெற்று கொள்ளவும்

குயிலன் புத்தகசாலை ஆனந்தபுரம் கிளிநொச்சி (சி.11544)


# பாரிய அளவில் பலப்படுத்தப்படும் ஓமந்தை இராணுவ முகாம்

(செட்டிகுளம்)

வவுனியா ஓமந்தை இராணுவ முகாமை இராணுவம் பாரிய அளவில் மண் காப்பரண்கள் போட்டு புனரமைப்பு செய்து வருகின்றது.

அண்மை நாட்களாக வவுனியாவில் உள்ள அனைத்து இராணுவத் தளங்களையும் இராணுவம் புனரமைப்பு செய்து வருவதுடன், முகாமுக்கு பாதுகாப்பாக மண் காப்பரண்களை மிக உயரமாக அமைத்து பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

நகரில் உள்ள யோசப் முகாம், புனாவையில் உள்ள விமானப்படை முகாம், ஓமந்தை இராணுவ முகாம், என்பன இவ்வாறு புனரமைப்பு செய்யப்படுகின்றன. (21)

*ஓமந்தை சோதனைச் சாவடியில்*

# இராணுவத்தினர் அசிரத்தை பயணிகள் அசௌகரியம்!

(அலுவலக செய்தியாளர்)

ஓமந்தை சோதனைச் சாவடியூடாக பயணத்தினை மேற்கொள்வோர் அண்மைநாட்களாக பல அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர்.

சோதனைச் சாவடியூடாக பயணிப்போர் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக நீண்ட நேரம் காத்து நிற்க வேண்டிய நிலை தற்போது நீடிக்கின்றது.

இப்பணிகளில் ஈடுபடும் படையினர் தற்போது அசிரத்தையுடன் செயற்பட்டு வருகின்றனர்.

இதனால் வைத்தியசாலைகளுக்குச் செல்லும் நோயாளர்களும், குழந்தைகளுடன் செல்லும் பெண்களும் மற்றும் முதியவர்களும் நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்வோரும் பல அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர் (தீ)

# மன்னாரில் வீதி விபத்து; ஒருவர் படுகாயம்

(மன்னார்)

மன்னாரில் உந்துருளியும் வானும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளான சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மன்னார் பேசாலையிலிருந்து வந்து கொண்டிருந்த உந்துருளியும் எருக்கலம் பிட்டி கிராமத்திலிருந்து வந்த வான் ஒன்றும் மோதியதில் உந்துருளியில் பயணித்துக் கொண்டிருந்தவர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது. (18)

*தமிழீழ மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில்*

# மாவீரர் கப்டன் அபயனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

கப்டன் அபயன் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு நேற்றுப் பிற்பகல் 4.30 மணிக்கு தமிழீழ மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் கிளிநொச்சி பண்ணங்கண்டியிலுள்ள கப்டன் அபயன் நினைவு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் ஈகச்சுடரினை தமிழீழ மாணவர் அமைப்பைச் சேர்ந்த கஜன் ஏற்றிவைக்க. கப்டன் அபயனின் திருவுருவப்படத்திற்கான மலர் மாலையினை கப்டன் அபயனின் தாயார் அணிவித்தார். மலர்வணக்கத்தினைத் தொடர்ந்து நினைவுரையினை தமிழீழ கல்விக்கழகத்தை சேர்ந்த சுடர் நிகழ்த்தினார்.

தொடர்ந்து நினைவுக் கவிதைகள், பேச்சுக்கள் இடம் பெற்றன. நினைவு நிகழ்வாக பொது நோக்கு மண்டபவளாகத் தில் கப்டன் அபயனின் தயாரால் மரக்கன்று நாட்டிவைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# மன்னார் பொது வைத்தியசாலையில் பாம்புக்கடி நோயாளர் அதிகரிப்பு

(மன்னார்)

மன்னார் பொதுவைத்தியசாலையில் பாம்புக்கடி நோயாளர்கள் தொகை அதிகரித்து வருகின்றது.

நேற்று முன்தினம் மட்டும் ஐந்து பேர் பாம்புக்கடிக்கு இலக்காகி மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முருங்கன், அடம்பன் ஆகிய இடங்களில் இருந்து இவர்கள் நோயாளர்கள் பாம்புக்கடிக்கு இலக்காகி மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (18)

# விபத்தில் சிக்கிய முல்லை வாசி மரணம்

(முல்லைத்தீவு)

வவுனியாவில் இடம் பெற்ற விபத்தில் சிக்கி கொழும்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவர் மரணமடைந்துள்ளார்.முல்லைத்தீவு வண்ணாங்குளத்தைச் சேர்ந்த சோதீஸ் சதீஸ்குமார் என்பவர் கடந்த 23 ஆம் திகதி வவுனியா நகரப்பகுதியில் இடம் பெற்ற விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் கொழும்பு வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டிருந்தார்.அங்கு சிகிச்சைகள் பயனளிக்காத நிலையில் அவர் மரணமடைந்துள்ளார். இவர் சுனாமி அனர்த்தத்தின் போதும் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (20)

*—வவுனியா தேசியக்கல்வியியற் கல்லூரியில்—*

# பகிடிவதை தொடர்கின்றது ; மேலும் மூவர் இடைநிறுத்தம்!

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் இரண்டாம் வருட ஆசிரிய பயிலுநர்கள் முதலாம் வருட ஆசிரியபயிலுநர்கள் மீது தொடரும் மோசமான பகிடிவதை யால் பல முதலாம் வருட ஆசிரிய பயிலுநர்கள் மோசமாகப் பாதிக்கப் பட்டுள்ளனர்.

பகிடிவதையை மேற்கொண்ட இரண்டாம் வருட ஆசிரிய பயிலுநர்களில் மேலும் மூவர் கல்லூரி நிர்வாகத்தினால் இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 14 ஆம் திகதி கல்வியியற் கல்லூரிக்கு முதலாம் வருட ஆசிரிய பயிலுநர்கள் வருகை தந்த பின் இரண்டாம் வருட ஆசிரிய பயிலூநர்கள் இவர்கள் மீது மிக மோசமான பகிடிவதையை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் பாதிப்படைந்த முதலாம் வருட ஆசிரிய பயிலுநர்கள் சிலர் வவுனியா பொது வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் பகிடிவதையை மேற்கொண்டு வரும் இரண்டாம் வருட ஆசிரிய பயிலுநர்களில் மேலும் மூவர் நேற்றுத் தொடக்கம் கல்வியற் கல்லூரியில் இருந்து இடைநித்தப்பட்டுள்ளனர். இவர்கள் உட்பட இது வரை ஐந்து ஆசிரிய பயிலுநர்கள் இடை நிறுத்தப்பட்டடுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (10,21)

# கசிப்பு உற்பத்தி குறித்து நீதிபதியிடம் மக்கள் முறையீடு

(செட்டிகுளம்)

வீரபுரம் கிராமத்தில் 90 வீதமான வீடுகளில் கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் நடைபெறுவதனால் அங்கு குற்றச்செயல்கள் பெருகியுள்ளதாக வீரபுரம் பகுதிக்கு கொலைச் சம்பவம் குறித்தவிசாரணைக்குச் சென்ற வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியனிடம் வீரபுரப் பகுதி மக்கள் முறையிட்டுள்ளார்கள்.

இது தொடர்பாக பலரிடமும் தாங்கள் முறையிட்ட போதிலும், இந்தச் சமூகக் கேடான செயலுக்கு முடிவேற்படவில்லை என்று அங்கு கூடிய அவ்வூரைச் சேர்ந்த பல பெண்கள் நீதிபதியிடம் தெரிவித்துள்ளார்கள்.

அயல் கிராமங்களில் கட்டுப்பாடு நிலவுவதாகவும் ஆனால் தமது கிராமத்தில் கட்டுப்பாடின்றி கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் நடைபெறுவதனால் அயல் கிராமங்களைச் சேர்ந்தவர்களும் கசிப்பு அருந்துவதற்காக அங்கு வந்து குவிவதாகவும் நீதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதனையடுத்து வீரபுரம் பகுதியில் இடம்பெறுகின்ற குற்றச் செயல்களை இரண்டு வாரத்தினுள் முடிவுக்குக் கொண்டு வருவதற்கான துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விசாரணைக்காகத் தம்முடன் வந்திருந்த செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தின் குற்றப்பிரிவுப் பொறுப்பதிகாரிக்கு வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் உடனடியாக உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் செட்டிகுளம் மற்றும் வவுனியா பொலிஸ் நிலையங்களின் தலைமையகப் பொலிஸ் அதிகாரிகளுக்கும் வீரபுரம் பகுதியின் குற்றச்செயல்களைக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டுள்ளதுடன்,

தினசரி வீரபுரம் பகுதிக்கு செட்டிகுளம் பொலிசார் ரோந்து நடவடிக் கையில் சென்று கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபடுபவர்களைக் கைது செய்து நீதிமன்றத் தில் ஆஜர் செய்யுமாறும உத்தர விட்டுள்ளார். (21)

# இரண்டாம் வருட ஆசிரிய பயிலுநர்கள் ஆர்ப்பாட்டம்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் இரண்டாம் வருட ஆசிரிய பயிலுநர்கள் இரண்டு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நேற்று கல்லூரி நுழைவாயிலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கல்லூரிக்கு புதிதாக வருகை தந்த முதலாம் வருட ஆசிரிய பயிலுநர்கள் மீது மிகமோசமான பகிடிவதையை மேற்கொண்ட இரண்டாம் வருட ஆசிரிய பயிலுநர்களில் பலர் இனங்காணப்பட்டு கல்லூரி நிர்வாகத்தினால் இடைநிறுத்தப்பட்டு வரும் இவ் வேளையில் ,இரண்டாம் வருட ஆசிரிய பயிலுநர்கள் கல்லூரி நிர்வாகத்தால் கடந்தவாரம் இடை நிறுத்தப்பட்ட இரண்டாம் வருட ஆசிரிய பயிலுநர்கள் இருவரையும் கல்லூரியில் இணைக்குமாறும், நேற்று முதல் இடைநிறுத்தப்பட்டுள்ள மேலும் மூன்று இரண்டாம் வருட ஆசிரிய பயிலுநர்களையும் வெளியேற்றுவதை நிர்வாகம் நிறுத்துமாறும் கோரியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இரண்டாம் வருட ஆசிரிய பயிலுநர்களின் இவ் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்குமாறு இவர்கள் முதலாம் வருட ஆசிரிய பயிலுநர்களை வற்புறுத்திய போதும் அவர்கள் இவ் ஆர்ப்பாட்டத்தில் பங்கு பற்றப்போவதில்லை என தெரிவித்துள்ளதாக முதலாம் வருட ஆசிரிய பயிலுநர் ஒருவர் தெரிவித்துள்ளார் (10,21)

# திருத்தப்படாத வீதி

மன்னார் பெரிய கடை அயன்ஸ் ஸ்டோர் வீதி கடந்த பல வருடங்களாக திருத்தப்படாமல் உள்ளது.

இவ் வீதியானது மன்னார் நகரத்திற்கு செல்லும் முக்கியமான வீதியாகும். இவ் வீதியில் இரண்டு பெரிய பள்ளங்கள் காணப்படுவதால் மழைநீர் மற்றும் கழிவு நீர் தேங்கி நின்று போக்குவரத்திற்கு பெரும் இடையூறுகள் ஏற்படுகின்றது.அத்துடன் தொற்று நோய்கள் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது இது தொடர்பாக பிரதேசசபைக்கு அறிவித்தபோதிலும் இது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (18)

# மீளக் குடியமர அனுமதி வேண்டும்; இல்லையேல் வெகுசனப் போராட்டம்!

## வளலாய், இடைக்காடு பகுதி மக்கள் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

**யாழ். வலி கிழக்கு வளலாய், இடைக்காடு போன்ற பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தம்மை சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதிக்காவிட்டால் தொடர்ச்சியான வெகுசனப் போராட்டங்களில் குதிக்கப் போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

மேற்படி பகுதிகளை கடந்த கால ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் மூலம் தம் வசப்படுத்தி வைத்திருக்கும் சிறிலங்காப் படையினர் அப் பிரதேசங்களை இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்களாகவும் பிரகடனப்படுத்தி வைத்துள்ளனர்.

பலாலி இராணுவப் படைத் தலைமையக பாதுகாப்பு வலயப் பிரதேசத்தின் ஓர் அங்கமாகவுள்ள மேற்படி பிரதேசங்களில் தம்மை குடியமர அனுமதிக்குமாறு மக்கள் விடுத்த கோரிக்கைகள் சிறிலங்காப் படையினரால் நிராகரிக்கப்பட்டு வரும் நிலைமையைச் சுட்டிக் காட்டியே இவ்வாறு அப் பகுதி மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இப் பிரதேசங்களில் தம்மை மீளக் குடியமர அனுமதிக்குமாறு வற்புறுத்தியும் அரசு தமது கோரிக்கைகளை ஏற்கத் தவறின் தாம் தொடர்ச்சியான வெகுசனப் போராட்டங்களில் குதிக்கப் போவதாகவும் எச்சரித்து சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவிற்கு அப் பகுதி மக்கள் மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர். (33)

## நிவாரணம் நிறுத்தப்பட்டமைக்கு தென்மராட்சி மக்கள் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

யாழ். தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பல குடும்பங்களுக்கு அரசின் உலருணவு நிவாரண விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

மீள் குடியமர்வுக் கொடுப்பனவாகிய இருபத்தையாயிரம் ரூபா நிதி உதவியை பெற்றுள்ளமையைக் காரணம் காட்டி அரசினால் இவ் உலருணவு நிவாரண விநியோகம் நிறுத்தப்பட்டமைக்கு ஆட்சேபம் தெரிவித்து அப்பகுதி மக்கள் யாழ். அரச அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

தென்மராட்சி மக்களுக்கு முழுமையான மீள் குடியமர்வோ இயல்பு வாழ்வோ திரும்பாத நிலையில் அரசின் இத்தகைய நிவாரண வெட்டை ஒரு போதும் ஏற்க முடியாது எனவும் தெரிவித்துள்ள மக்கள் தமக்கான உலருணவு நிவாரண விநியோகம் மீள வழங்கப்படாத பட்சத்தில் தாம் வெகுசன போராட்டங்களில் குதிப்போம் எனவும் எச்சரித்துள்ளனர். (33,28).

## அம்மன் ஆலயத்தின் முன்னால் படையினரின் புத்தர் சிலை

(காரைநகர்)

காரைநகர் வலந்தலைச் சந்தி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அருகாமையிலுள்ள மடத்துக்கரை அம்மன் ஆலயத்தின் முன்னால் கடற்படையினர் புத்தர் சிலையொன்றை வைத்து வழிபட்டு வருவதையிட்டு மக்கள் விசனம் தெரிவித்துள்ளார்கள்.

ஏற்கனவே ஆலயத்திற்கு முன்பாகவுள்ள அரச மரத்தின் கீழ் வைரவர் சூலம் வைக்கப்பட்டு அப் பகுதி மக்களினால் வழிபாடுகள் செய்யப்பட்டு வருகின்றது. இந்த நிலைமையில் வைரவர் சூலத்திற்குப் பின்புறமாக உள்ள பகுதியில் கடற்படையினர் புத்தர் சிலையை வைத்து வழிபட்டு வருகின்றமை பொது மக்களின் கடும் சீற்றத்திற்கு உள்ளாகியுள்ளது.

வலந்தலைச் சந்தியிலுள்ள கடற்படையினர் இப் பகுதியை கடும் கண்காணிப்பின் கீழ் வைத்திருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (41)

## ஊர்காவற்துறை வைத்தியசாலையில் அடிப்படை வசதிகள் இல்லை

(தீவகம்)

யாழ்.தீவகத்திலுள்ள ஊர்காவற்துறை வைத்தியசாலை அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இயங்கி வருவதால் இப் பகுதி மக்கள் இவ் வைத்தியசாலையூடாக பூரண பயனடைய முடியாத நிலையில் உள்ளனர்.

குறிப்பாக இவ் வைத்தியசாலையில் இடப் பற்றாக்குறை, மலசலகூட வசதியின்மை, வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் பற்றாக்குறை மருந்துப் பொருட்கள் தட்டுப்பாடு வைத்திய உபகரணங்கள் இன்மை போன்ற அடிப்படை வசதிகள் இல்லாதுள்ளன. இதனால் இப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (33)

அன்னை பூபதி நினைவு தினத்தை முன்னிட்டு

## சாவகச்சேரி மருத்துவமனையில் நேற்று மக்கள் சிரமதானப் பணி

(தென்மராட்சி)

அன்னை பூபதியின் நினைவு தினத்தை முன்னிட்டு தென்மராட்சிக் கோட்ட அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் சாவகச்சேரி மருத்துவமனையில் நேற்று சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த கால யுத்த நடவடிக்கையின் போது இடிந்த நிலையில் காணப்பட்ட கட்டட இடிபாடுகள் மற்றும் கற்குவியல்கள் என்பன சிரமதானம் மூலம் அகற்றப்பட்டன. மேலும் வைத்தியசாலைச் சூழலில் காணப்பட்ட பற்றைகளும் வெட்டி அகற்றப்பட்டன.



தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பல்வேறு அமைப்புக்களைச் சேர்ந்தோரும் இச் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

தென்மராட்சிக் கோட்டப் பொறுப்பாளர் ஈஸ்வரன், கொடிகாமம் பிரதேசப் பொறுப்பாளர் இரத்தினம் தென்மராட்சிக் கோட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் அலைவாணி ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர். (28)

## மணல் பெறுவதில் பெரும் நெருக்கடி நிலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கட்டடத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் மணல் பெற்றுக் கொள்வதில் பெரும் நெருக்கடி நிலைமைகள் உள்ளதால் இங்கு இடம் பெறும் கட்டடநிர்மாண நட வடிக்கைகள் பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளன.

இம் மணல் நெருக்கடிகள் காரணமாக பல கட்டடநிர்மாண வேலைத்திட்டங்கள் இடை நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் அபிவிருத்தி உட்பட மீள் கட்டுமான நடவடிக்கைகள்பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளன.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி திருட்டு மணல் அகழ்வோர் தம்மால் அகழப்படும் திருட்டு மணலை அதிக விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர். இதனால் பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (33)

## நினைவுப் பேருரை

(சுன்னாகம்)

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் முன்னாள் அதிபரும், பேரறிஞருமாகிய அமரர் வி.சிவசுப்பிரமணிய த்தின் ஞாபகார்த்த நினைவுப் பேருரை இன்று திங்கட் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஸ்கந்தவரோதாயக் கல்லூரி அதிபர் கே. சிவாஜி தலைமையில் கல்லூரி நூலக மண்டபத்தில் இடம் பெறவுள்ளது (41)

## தலையாளி வீதி மோசமான நிலையில்

(நல்லூர்)

யாழ் மாநகர சபைக்கு உட்பட்ட தலையாளி வீதி மக்கள் பிரயாணம் செய்ய முடியாத அளவுக்கு மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்து காணப்படுகின்றது.

கடந்த பல வருடங்களுக்கு மேலாக இவ் வீதி எந்த வகையான திருத்தப் பணிகளுக்கும் உள்ளாக்கப்பட வில்லையென அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ் வீதியை நாளாந்தம் பல ஆயிரக்கணக்கான பொது மக்கள் மற்றும் யாழ் நகரப் பாடசாலைகளை நோக்கிச் செல்லும் மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் எனப் பலரும் பயன்படுத்தி வருகின்றனர். (41)

–உலக உணவுத் திட்ட அபிவிருத்திப் பணிகள்–

## குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிறைவேற்றப்பட வேண்டும்!

— யாழ். அரச அதிபர் கே.கணேஷ் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இவ்வாண்டு உலக உணவுத் திட்டத்தின் கீழ் அமுல் செய்யப்படவுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் யாவும் அவ்வவ் திட்டங்களுக்கென குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் நிறைவேற்றி முடிக்கப்படல் வேண்டும் என யாழ். அரச அதிபர் கே.கணேஷ் வலியுறுத்தியுள்ளார்.

பொது மக்களுக்கான சேவைகள் உதவிகள் யாவும் குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் மக்களைச் சென்றடைவதுடன் நிதி விரயம் மற்றும் கால தாமதங்கள் என்பனவற்றை தவிர்க்கும் நோக்கிலேயே இதனை அரச அதிபர் வலியுறுத்தியுள்ளார். (33)

## சிறுவர் மறுவாழ்வுத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு மறுவாழ்வளிக்கும் திட்டங்கள் பலவற்றை யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு நடைமுறைப்படுத்தவுள்ளது.

இத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முன்னேற்பாடாக சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் விபரங்களைச் சேகரிக்கும் பணியில் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் பாதிக்கப்பட்ட சிறுவர்களிடமிருந்து விபரங்கள் சேகரிக்கப்படாத பட்சத்தில் அவ்வாறான சிறுவர்கள் குறித்த தகவல்களை அறிந்தோர். அது குறித்து தம்மிடம் தெரிவித்து சிறுவர்களின் எதிர்காலத்தை வளப்படுத்த ஒத்துழைக்குமாறும் கோரப்பட்டுள்ளது. (33)

## பாரிய மரநடுகைத்திட்டம்

யாழ்.குடாநாட்டில் பாரியளவிலான மரநடுகைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த "சொண்ட்" என்ற சர்வதேச தொண்டர் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இம்மரநடுகைத்திட்டத்திற்கான பயன் தரும் மரங்களை அன்பளிப்புச் செய்யவிரும்புவோர் சொண்ட், இல: 60,அரசடி வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியுடனோ அல்லது 2226700 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுள்ளனர். (33)

## 'தூறல்' மாதாந்த சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

தமிழ்மாணவர் ஒன்றியத்தால் வெளியிடப்படவிருக்கும் "தூறல் மாதாந்த சஞ்சிகைக்கு தரமான ஆக்கங்கள் பாடசாலை மாணவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

அறிவியல் தவல்கள்,தமிழ்பண்பாட்டு விழுமியங்களை பிரதிபலிக்கக் கூடிய சிறுகதைகள்கட்டுரைகள்,கவிதைகள் மற்றும் விளையாட்டுத் தகவல்கள் ஏனைய அரிய தகவல்கள் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன. ஆக்கங்களை பாடசாலைகளின் மாணவர் ஒன்றிய பிரதிநிதியூடாகவோ அல்லது தமிழ் மாணவர் ஒன்றிய தலைமைச்செயலகத்தினூடாகவோ ஒப்படைக்க முடியும் என 'தூறல்' வெளியீட்டுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

# முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய அனுசரணையுடன் முன்பள்ளி இணைப்பாளர்களுக்கு பயிற்சிப் பட்டறை

**தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மாவட்டரீதியாக நடாத்திவரும் முன்பள்ளி இணைப்பாளர்களுக்கான "பயிற்சிப்பட்டறையும் மாதாந்த ஒன்றுகூடலும்" என்ற தலைப்பிலான பயிற்சிப்பட்டறை நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9.00 மணிய ளவில் உ ளளூராட்சி ஆணையாளர் திணைக்கள உள்ளரங்கில் வைபவ ரீதியாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.**

வவுனியா மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டு வருகின்ற இப்பயிற்சிப் பட்டறை நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்றுப பணிப்பாளர் வறீகன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் மூர்த்தி, தமிழர்புனர்வாழ்வுக் கழக ஆரம்ப பிள்ளைப்பருவ கல்வி அபிவிருத்திப் பணிப்பாளர் பாண்டியன், வலய உதவிகல்விப் பணிப்பாளர் கணேசபாதம், வடக்கு கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய திட்டமுகாமையாளர் கணேசலிங்கம், வவுனியா மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத் தலைவர் சுப்பிரமணியம் வவுனியா நகர பிரதேச முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் சேனாதிராசா மற்றும் எட்டு மாவட்டங்களின் முதன்மை ஆசிரியர்கள், பிரதேச வலய இணைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழர் புனர்வாழ்வுக் கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் றீகனின் சுடரேற்றலு டன் ஆரம்பமாகிய இந்நிகழ்வு வவுனியா தெற்கு வலய முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய இணைப் பாளர் திருமதி. அருள்வேல் நாயகி தலைமையில் இடமபெற்றது. ஆசியுரைகள், சிறப்புரைகள், நிறைவுரைகள் என்பவற்றுடன் நிகழ்வுகள் இனிது நிறைவு பெற்றதையடுத்து, முன்பள்ளி முதன்மை ஆசிரியர்கள், இணைப்பாளர்களுக்கான சிறப்பு நிபுணத்துவம் வாய்ந்த வளவாளர்களினால் மேலதிக பயிற்சிகள் வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் வழங்கப்பட்டு வருகின்றன. (21)

## போசாக்கு நிலையம் திறப்பு விழா

(அலுவலக செய்தியாளா)

நோர்வே தமிழர் புனர்வாழ்வுக் கழக நிதியுதவியில் அக்கராயன் 8 ஆம் கட்டை ஆரோக்கியபுரத்தில் அமைக்கப்பெற்ற அன்பு தாய்சேய் போசாக்கு நிலைய புதிய கட்டடத் திறப்புவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடை பெறவுள்ளது. (சோ)

## நேற்றுஇரணைப்பாலையில் மாவீரர் படிப்பகம் திறப்பு

சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழக ஆதரவுடன் இரணைப்பாலைச் சந்தியில் மாவீரர் படிப்பகம் நேற்று திறந்து வைக்கப்பட்டது .

விளையாட்டுக் கழகத் தலைவர் அ.மரியநாயகம் தலைமையில் காலை 11.00 மணிக்கு இந் நிகழ்வு இடம் பெற்றது.

இந் நிகழ்வில் மங்கல விளக்கினை முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர் செ. கிறிஸ்ரி இரணைப்பாலை கிராமப் பொறுப்பாளர் பரிதியன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். மாவீரர் படிப்பகத்தினை முல்லை மாவட்ட தொழிற்சங்கப் பொறுப்பாளரும் புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளருமான பிறையாளன் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார். இந்நிகழ்வின் ஆசி உரையினை இரணைப்பாலை பங்குத்தந்தை வணபிதா ஆனந்தகுமார் வழங்கினார். சிறப்புரைகளை முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர் கிறிஸ்ரி, புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளரும் தொழிங்சங்கப் பொறுப்பாளருமான பிறையாளன் ஆகியோர் நிகழ்த்தினர். மேலும் இந் நூலகத்திற்கு ஜே.ஆர்.எஸ். நிறுவனம் புத்தகங்களையும் தளபாடங்களையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (08)

## போக்குவரத்து நடைமுறைகள் குறித்து மாணவர்களுக்குக் கருத்தூட்டல்

(புதுக்குடியிருப்பு)

போக்குவரவு நடைமுறைகள் குறித்த விளக்கக் கருத்தரங்குகள் புதுக்குடியிருப்பில் தீவிரமாக இடம் பெற்று வருகின்றன.

தமிழீழ காவல்துறையினரின் அப்பிரதேச பணிமனையினரால் நடாத்தப்படும் இக்கருத்தரங்கானது கடந்த புதன்கிழமை புதுக்குடியிருப்பு சிறி.சுப்பிரமணிய வித்தியாசாலை, றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், இரணைப்பாலை மகாவித்தியாலயம், உடையார்கட்டு மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் மாணவர்களுக்கு விளக்கக் கருத்தரங்குகளை நடத்தினர். அப்பிரதேச காவல் பணிமனையினைச் சேர்ந்த பிரதிக்குமார், கிருபாகரன், குணராசா, யோகச்சந்திரன், அழகேஸ்வரி, லூத்மேரி ஆகியோர் கலந்து கொண்டு மிகவும் தெளிவான முறையில் கருத்துக்களைக் கூறினர். (08)

## சுனாமியால் சாவடைந்தோர் நினைவாக பேருந்துத் தரிப்பு நிலையம் திறப்பு

(முல்லை)

சுனாமியால் சாவடைந்தோர் நினைவாக முல்லையில் பேருந்து தரிப்பு நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டது. சாவடைந்த கள்ளப்பாட்டைச்சேர்ந்த அல்பிறட் அன்ரனி ஜீவாஞ்சலி (லதா) , அல்பிறட் அன்ரனி அனோஜியன், மயில்வாகனம் கரோன்மணி ஆகியோரின் நினைவாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாக பேருந்துத்தரிப்பு நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை காலை திறந்துவைக்கப்பட்டது.

வெண்புறா திட்ட இணைப்பாளர் சந்திரசேகரம்பிள்ளை தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கினை முல்லை.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க உப தலைவர் தணிகாசலம் , முல்லை மாவட்ட கட்டடத் திணைக்களப் பிரதம பொறியியலாளர் ஜெயசீலன், யாழ்.மாவட்ட வெண்புறா பொருளாளர் ஆகியோர் ஏற்றிவைத்தனர் தொடர்ந்து பேருந்துத் தரிப்புநிலையக் கட்டடத்தினை முல்லை.மாவட்ட வைத்திய அதிகாரி தர்மேந்திரா நாடாவை வெட்டி திறந்துவைத்தார். பெயர்ப் பலகையினையும் இறந்தவர்களின் படத்தினையும் பிரதி மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் து.வி. ஜெயக்குலராஜா திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில் பெருமளவு மக்கள் போராளிகள், எனப்பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

## உடற்கல்வி, ஆங்கிலப் பாடங்களுக்கு ஆசிரியர்கள் வேண்டும்

(முள்ளியவளை)

முள்ளியவளை தமிழ் வித்தியாலயத்தில் உடற்கல்வி மற்றும் ஆங்கிலப் பாடத்திற்கான ஆசிரியர்கள் இன்றி மாணவர்களின் கற்றலில் பாரிய பின்னடைவு ஏற்பட்டு வருகின்றது.

மாகாண கல்வி அமைச்சினால் புதிதாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களில் முள்ளியவளை தமிழ் வித்தியாலயத்திற்கு உடற்கல்வி ஆசிரியர் நியமிக்கப்பட்டிருந்து ஒருவாரம் மட்டும் பாடசாலைக்குச் சமுகமளித்த அவ்வாசிரியர் திடீரென இடமாற்றமாகியுள்ள போதிலும் அவ்விடத்திற்கு இதுவரை ஆசிரியர் எவரும் நியமிக்கப்படாததால் மாணவர்களின் கற்றலில் பாரிய பின்னடைவு ஏற்பட்டு வருவதாகப் பெற்றோர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஆ)

## கிராமிய அபிவிருத்தி வங்கி 149 பயனாளிகளுக்கு கடனுதவி

(கிளிநொச்சி)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய அபிவிருத்தி வங்கி மக்களிற்குச் சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதோடு, சுயதொழில்துறைக் கடன்களையும் வழங்கிவருகின்றது.

இதனடிப்படையில் இவ்வருடம் பெப்ரவரி மாதம் 149 பயனாளிகளிற்கு 51 லட்சத்து 74 ஆயிரத்து 125 ரூபாவினை கடனாக வழங்கியுள்ளது. இதனடிப்படையில் விவசாயக் கடனாக 35 பயனாளிகளிற்கு 3 லட்சத்து 78 ஆயிரத்து ஐந்நூறு ரூபாவினையும், சுய தொழில் கடனாக 72 பயனாளிகளிற்கு 20 லட்சத்து 15 ஆயிரத்து ஐந் நூறு ரூபாவையும், தொழில்துறை மேம்பாட்டுக் கடனாக 18 பயனாளிகளிற்கு 16 இலட்சத்து ஆறுபதாயிரம் ரூபாவும் ஏனைய கடனாக 24 பயனாளிகளிற்கு 11 லட்சத்து இருதாயிரத்து 125 ரூபாவும் வழங்கப்பட்டது. மேலும் தளிர் சேமிப்பை ஆரம்பிக்கும் சிறார்களிற்கு பரிசில்களும், தளிர் சேமிப்புக் கணக்கில் ரூபா பத்தாயிரம் மற்றும் ரூபா ஐயாயிரம் வைப்பிலிருப்பின் சிறப்புப் பரிசில்களும், தளிர் சிறுவர் சேமிப்புப் கணக்கில் வைப்பினைப் பேணும் சிறார்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தால் அதற்கான பரிசில்களையும் கிராமிய அபிவிருத்தி வங்கிவழங்கி வருகின்றதென கிராமிய அபிவிருத்தி வங்கி பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (15)

## தாண்டிக்குளம் பாடசாலை மைதானத்திலிருந்த வெடிபொருட்கள் அனைத்தும் அகற்றல்

(வவுனியா)

வவுனியா தாண்டிக்குளம் பாடசாலை மைதானம் உட்பட பாடசாலை வளவில் புதையுண்டு இருந்த அனைத்து வெடிபொருட்களும் முற்றாக அகற்றப்பட்டுவிட்டதாக வெடிபொருட்களை அகற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் வவுனியா மாவட்ட திட்ட இணைப்பாளர் மைக்கல் ஹான்ஸ் தெரிவித்துள்ளார்.

சுவிஸ் கண்ணிவெடி அகற்றும் அமைப்பினரால் (எவ்.எஸ்.டி) கடந்த ஆண்டு துப்புரவுப் பணிகள் அனைத்தும் முடிவடைந்தபோதிலும் உத்தியோகபூர்வ சான்றிதழ் வைபவரீதியாக வியாழனன்று வழங்கப்பட்டது. அதையொட்டி நடந்த நிகழ்வில் திட்ட இணைப்பாளர் மைக்கல் ஹான்ஸ் கூறியதாவது: தாண்டிக்குளம் பாடசாலை வளவிலிருந்து ஒரு சக்திமிக்க கண்ணிவெடி உட்பட வெடிக்காத நிலையில் இருந்த 1,427 வெடி பொருட்கள் அகற்றப்பட்டுள்ளன, இதன் மூலம் 4,978 சதுர மீற்றர் துப்புரவு செய்யப்பட்டுள்ளது என்றார் அவர்.

மாவட்ட அரச அதிபர் சி.சண்முகம், வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி வீ.ஆர்.ஏ.ஒஸ்வோல்ட், எவ்.எஸ்.டி திட்ட இயக்குனர் மார்க் பரணியோ, எவ்.எஸ்.டி தேசிய செயற்பாட்டு முகாமையாளர் ஆர்.எஸ்.ஜெயபாலன் ஆகியோர் பங்கேற்றனர். வவுனியாவில் கண்ணிவெடிகளை அகற்றும் ஏனைய அமைப்புக்களுடைய பிரதிநிதிகளும் மாணவர்களும் அவர்களுடைய பெற்றோர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். பாடசாலை அதிபர் தலைமையில் மிகவும் எளிமையான முறையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

## வவுனியாவில் சிறுவர்களுக்கெதிரான குற்றச்செயல்கள் அதிகரிப்பு

(செட்டிகுளம்)

வவுனியாவில் சிறுவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்கள் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2004 ஆம் ஆண்டு மட்டும் சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமாக 80 வரையிலான முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக சிறுவர் துஷ்பிரயோக தடுப்புப் பிரிவு தெரிவிக்கின்றது. இதில் 12 வரையிலானவை பாலியல் துஷ்பிரயோகமாக பதியப்பட்டு இருப்பதாகவும், ஏனையவை சாதரண குற்றமாகப் பதியப்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு சிறுவர்களுக்கு எதிராக மேற் கொள்ளப்படும் துஷ்பிரயோகம் சம்பந்தமாக தற்போது மிகவும் உன்னிப் பாக அவதானித்து வருவதாகவும், சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர் களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சிறுவர் துஷ்பிரயோக தடுப்புப் பிரிவு மேலும் தெரிவிக்கின்றது. (21)

## "எல்லை காக்கும் இல்லங்கள்" எப்ரல்–2 நூல் வெளியீட்டு விழா

(அலுவலகசெய்தியாளர்)

தமிழவளின் " எல்லைகாக்கும் இல்லங்கள் " பாகம் ஒன்று நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் இரண்டாம் திகதி நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் மூன்று மணிக்கு கிளிநொச்சி கலை பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள மேற்படி நூல் வெளியீட்டு நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கப்டன் வானதி வெளியீட்டகத்தினர் வேண்டியுள்ளனர். (சோ)

## தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கம நிகழ்வு

பரந்தன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கம நிகழ்வு இன்று பிற்பகல் 3.00 மணிக்கு குமரபுரம் இந்து மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் சகலதுறைசார் பொறுப்பாளர்களும் , அரச உத்தியோகத்தர்களும் ஊரக தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அன்னை பூபதி நினைவாக சிரமதானம்

(பூநகரி)

பூநகரிப் பிரதேசத்தின் பல பாகங்களிலும் அன்னை பூபதியின் நினைவாக சிரமதானங்கள் நடைபெற்று வருகின்றன. கடந்த 22 ஆம் திகதி ஆலங்கேணி சுமன் முன்பள்ளியிலும, 23ஆம் திகதி சாமிப்புலம் தென்னிந்தியதிருச்சபை முன்பள்ளியிலும், 24 ஆம் திகதி நல்லூர் கந்தன் முன்பள்ளியிலும், 25 ஆம் திகதி முட்கெம்பன் பொது மண்டபத்திலும், மாதர் சங்கங்களால் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. இதில் பலர் கலந்து கொண்டு சிரமதானவேலைகளில் ஈடுபட்டனர். (34)




டோக்கியோவில் நடைபெற்ற மியான்மர் அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளும் பெண் ஒருவர் பர்மாவில் சனநாயகம் கோரிப் போராடும் ஆங்சான்சுகீயின் உருவப்படத்துடன் செல்கிறார்.

# பாகிஸ்தான் அமைதியை விரும்புகிறது என்ன விலைகொடுத்தும் நாட்டைக் காப்போம்

## - பிரதமர் சௌகத் அஜீஸ்

(இஸ்லாமபாத்)

**"பாகிஸ்தான் அமைதியை விரும்புகிறது.அண்டை நாடுகளுடன் சுமுக உறவை வைத்துக்கொள்ள விரும்புகிறது. ஆனால் என்ன விலை கொடுத்தும் நாட்டைக் காப்போம்" எனவும் பகிஸ்தான் பிரதமர் சௌகத் அஜீஸ் தெரிவித்துள்ளார்.**

எப்-16 ரக விமானங்களை விற்க அமெரிக்கா முன்வந்துள்ளதற்குப் பாகிஸ்தான் வரவேற்புத் தெரிவித்துள்ளது.

அதேசமயம் ஆயுதங்களை வாங்கும் திட்டம் எந்த நாட்டுக்கும் எதிரானதல்ல. உள்நாட்டுப் பாதுகாப்பிற்குத் தேவையானவற்றைத் தொடர்ந்து மேற்கொள்வோம் என்றார் பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அஜீஸ். பாகிஸ்தான் அமைதியை விரும்புகிறது. அண்டை நாடுகளுடன் சுமூக உறவை வைத்துக்கொள்ள விரும்புகிறது. ஆனால் என்ன விலை கொடுத்தும் நாட்டைக் காப்போம்" எனவும் அஜீஸ் கூறினார்.

போரில் வெல்ல விமானப் படை மிக முக்கிய பங்கை ஆற்றுகிறது. இந்நிலையில் போர் விமானங்களை பாகிஸ்தானுக்கு விற்கஅமெரிக்கா முன்வந்தது மிக முக்கியமானது என்றார்.

இவ்விமானங்களை இந்தியாவுக்கு விற்க அமெரிக்கா ஒப்புக்கொண்டுள்ளது. ஆகவே எங்களுக்கு விமானங்களை விற்பதை இந்தியா எதிர்க்கக் கூடாது என வலியுறுத்தினார்.

# ஈராக் சிறையில் 600 அடி நீளச் சுரங்கம்; கைதிகள் தப்பும் முயற்சி முறியடிப்பு

(வோஷிங்டன்)

ஈராக்கில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட கைதிகள் அடைக்கப்பட்டுள்ள சிறையில் தப்பிச் செல்வதற்காக 600 அடி நீள சுரங்கப்பாதை தோண்டப்பட்டுள்ளதை அமெரிக்க ராணுவம் கண்டு பிடித்துள்ளது.

இது குறித்து அமெரிக்க ராணுவ அதிகாரிகள் கூறியதாவது; கேம்ப் புக்கா சிறையின் மையப் பகுதியில் இருந்து தோண்டப்பட்டுள்ள சுரங்கம் மதிற்சுவருக்கு வெளியே முடிகிறது. கூடாரங்கள் அமைக்கப்பயன்படும் சிறிய மண்வெட்டியையும், நீர எடுக்கப் பயன்படும் பிளாஸ்டிக்கானையும் பயன்படுத்தி இச் சுரங்கம் தோண்டப்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது.

இச் சுரங்கம் 3.66 மீற்றர் முதல் 4.57 மீற்றர் ஆழமும் ஒரு மீற்றர் அகலமும் கொண்டது.

ஈராக்கியக் கைதிகளில் மூன்றில் ஒரு பகுதியினர் இச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். சுரங்கம் தொடங்கிய பகுதி தூசியால் மூடப்பட்டிருந்ததால் வெளியே தெரியவில்லை. ஆனால் சுரங்கத்தில் தோண்டி எடுத்த மண் கழிவறைகளிலும், மற்ற இடங்களிலும் காணப்பட்டதால் அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து சிறையில் பல்வேறு இடங்களையும் அதிகாரிகள் சோதனை செய்து பார்த்ததில் சுரங்கம் தோண்டப்பட்டிருப்பது தெரிய வந்தது. கைதிகள் தப்பிச் செல்லும் முன் சுரங்கத்தை அதிகாரிகள் கண்டு பிடித்துவிட்டனர்.

பெரும் எண்ணிக்கையில் கைதிகள் தப்பிச் செல்ல இதுவரை நடந்த முயற்சிகளிலேயே இதுதான் மிகப் பெரியது. இதற்கு முன் சிறிய சுரங்கங்கள் தோண்டப்பட்டன. தொடக்கத்திலேயே கண்டு பிடிக்கப்பட்டது. சனவரி 31 இல் இச் சிறையில் பெரும் கலவரம் நடந் தது. அப்போது ராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நான்கு கைதிகள் இறந்தனர். ஆறு பேர் காயமடைந்தனர்.

# இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் காலமானார்




இங்கிலாந்து முன்னாள் பிரதமர் ஜேம்ஸ் காலகான் மரணம் அடைந்தார். அவருக்கு வயது 93 தனது பிறந்த நாளிலேயே அவரது உயிர் பிரிந்தது. தொழிற் கட்சியைச் சேர்ந்த ஜேம்ஸ் காலகானின் மனைவி கடந்த 11 நாட்களுக்கு முன்புதான் தனது 60-ஆவது வயதில் மரணமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜேம்ஸ்காலகான் 17-ஆவது வயதில் பள்ளிப் படிப்பை பாதியில் முடித்து விட்டுத் தொழிலாளர் கட்சியில் இணைந்து தீவிரமாகப் பணியாற்றியவர். பல்வேறு இலாகாக்களில் மந்திரிப் பதவியும் வகித்து வந்தார்.



கிர்கிஸ்தானில் புதிய ஆட்சிக்கு ஆதரவளித்து ஓஷ் சதுக்கத்தில் ராணுவத்தினரும், பொதுமக்களும் நேற்றுப் பேரணி நடத்தினர்.

# எதிர்க்கட்சி ஒன்று ஷரோனுக்கு ஆதரவு வீழ்ச்சியிலிருந்து தப்பியது அரசு



இஸ்ரேலின் முக்கிய எதிர்க்கட்சி ஒன்று பிரதமர் ஏரியல்ஷரோனுக்கு ஆதரவு வழங்கமுடியுமென தெரிவித்ததனைத் தொடர்ந்து இஸ்ரேலிய அரசாங்கம் வீழ்ச்சியடைவதில் இருந்து தப்பியுள்ளது.

அதே சமயம் காஸா முனையில் இருந்து இஸ்ரேலிய இராணுவமும் குடியேற்றக்காரர்களும் வெளியேறும் நடவடிக்கைகளும் முன்னெடுத்துச் செல்லப்படவிருக்கின்றது. எதிர்க் கட்சி பிரதிநிதிகள் தெரிவித்த நிபந்தனையில் மத்திய கிழக்கு சமாதான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும், காஸா முனையிலிருந்தும், மேற்குக் கரையோரப் பகுதியிலிருந்தும் ஏற்கனவே திட்டமிடப்பட்ட வாபஸ் பெறும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம் பெறவேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

காஸா முனையில் உள்ள சகல குடியேற்றத் திட்டங்களிலிருந்தும் மேற்குக் கரையோரப் பகுதியில் இருந்தும் நான்கு குடியேற்றங்களில் இருந்தும் வாபஸ் பெறும் இஸ்ரேலின் திட்டத்திற்கு அமெரிக்கா ஆதரவு வழங்கியுள்ளது.

# கிர்கிஸ்தானில் யூன் மாதம் சனாதிபதித் தேர்தல்-தற்காலிக சனாதிபதி



(பிஷ்கேக்)

கிர்கிஸ்தானில் யூன் மாதம் சனாதிபதித் தேர்தல் நடக்கும் என்று தற்காலிக சனாதிபதி குர்மன் பாகியேவ் கூறினார்.

கிர்கிஸ்தானில் மக்கள் நடத்திய போராட்டத்தால் சனாதிபதி அஸ்கார் அகயேவ் நாட்டை விட்டு ஓடி விட்டார். மக்கள்தொடர்ந்து கலவரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கடைகளில் கொள்ளையடிப்பது தொடர்கிறது. எதிர்க்கட்சித் தலைவரான குர்மன் பாகியேவ் தற்காலிக சனாதிபதியாக பதவியேற்றுள்ளார். கலவரத்தை ஒடுக்க அவர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். மேலும் யூன் மாதம் சனாதிபதித் தேர்தல் நடக்கும் என்றும் அவர் அறிவித்தார்.

கிர்கிஸ்தானில் அமைதியாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருப்பதை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

## அமெரிக்காவுடன் போரிட வடகொரியா தயார்

(பாக்தாத்)

தங்களுடைய அணுவிசை திட்டம் தொடர்பாகத் தொடர்ந்து ஆட்சேபித்து வரும் அமெரிக்கா தங்களை தாக்க முற்பட்டால், திருப்பி தாக்கத் தாங்களும் தயார் என்று வட கொரியாவின் தாய்லாந்து நாட்டுத் தூதர் ஓ. சாங்சோல் எச்சரித்திருக்கிறார்.

# வெளிநாட்டுத் தொழிலாளர்களை மட்டுப்படுத்த சவுதி முடிவு!

(துபை)

வெளிநாட்டுத் தொழிலாளர்களை பணிக்கு அமர்த்துவதை நிறுத்திவிடும் திட்டம் எதுவும் இல்லை என சவுதி அரேபியா கூறியுள்ளது.

நாட்டின் சட்டப்படி வெளிநாட்டுத் தொழிலாளர், உள்நாட்டுத் தொழிலாளர் என்ற வேறுபாடு கிடையாது எல்லோருக்கும் சம உரிமைகள் அளிக்கப்படுகின்றன.

ஆனால் உள்நாட்டவருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் வெளிநாட்டுப் பணியாளர்களைக் குறைத்துக்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டுத் தொழிலாளர்களையே நம்பியிருக்கும் நிலையை மாற்ற அமைச்சரவை முடிவு செய்துள்ளது. அதிகளவு உள்நாட்டவரைப் பணிகளில் ஈடுபடுத்தும் முயற்சிகள் தொடங்கியுள்ளன.

வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்காக ஆண்டுதோறும் எட்டு லட்சத்து 32 ஆயிரம் விசாக்கள் அளிக்கப்பட்டு வந்தது. இது தற்போது ஆறு லட்சத்து 84 ஆயிரமாகக் குறைந்துள்ளது. சவுதி அரேபியப் பெண்களுக்காக சிறப்பு வேலைவாய்ப்புத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது வேலை வாய்ப்புக் கோரும் பெண்களின் பெயர்களைப் பதிவு செய்வதற்காக நாடு முழுவதும் பெண்கள் பிரிவை ஏற்படுத்த முடிவு செய்துள்ளோம் என்றார் அந்நாட்டின் தொழிலாளர் துறை அமைச்சர்.

## தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தில் 130 பேர் ஈராக்கில் கைது

(பாக்தாத்)

ஈராக்கில் தீவிரவாதிகள் என சந்தேகிக்கப்படுவோர் 130 பேரைப் பொலிசார் கைது செய்துள்ளனர். ஈராக் கர்பாலா நகரில் நேற்று முன்தினம் ஈராக் பொலிசாரும், அமெரிக்கப் படையினரும் இணைந்து தீவிர தேடுதல் வேட்டை நடத்தினர். இதில் தீவிரவாதிகள் என சந்தேகிக்கப்படும் 130 பேர் பிடிபட்டதாகவும் அந்தப் பகுதியில் இருந்து ஏராளமான ஏவுகணைகள், வெடிமருந்துகள் மற்றும் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாகவும் பிடிபட்ட தீவிரவாதிகள் புனித நகரான கர்பாலா மீது மிகப் பெரிய தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. இது குறித்து ஈராக் பொலிசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.



நேற்று முன்தினம் பெய்ரூட்டில் கிறிஸ்தவர்கள் நிறைந்து வாழும் கைத்தொழிற்பேட்டையருகே நிகழ்ந்த குண்டுவெடிப்பில் சேதமான கட்டடத்தையும், சம்பவம் நடந்த இடத்தைப் பரிசோதனை நடத்தும் லெபனான் இராணுவத்தையும் காண்க.

# சர்வசன வாக்கெடுப்பும் — சந்திரிகாவின் அரசியல் எதிர்காலமும்

சுமார் நான்கு வருடங்களுக்கு முன்பு அதாவது 2001ஆம் ஆண்டு ஜே.வி.பி கட்சியினர் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர். அதன்போது இந்நாட்டில் மக்கள் வாழ வழியின்றியிருப்பதாகவும், பசிபட்டினியால் வாடுவதாகவும் அத்தியாவசிய பொருட்களின் விலை மிகவும் உச்ச நிலைக்கு உயர்ந்து விட்டதாகவும் கூச்சலிட்டனர். அத்துடன் இது தொடர்பாக சந்திரிகா எந்த ஒரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அதற்கு மாறாக அரசியலமைப்பை மாற்றுவதா? இல்லையா? என்ற சிந்தனையிலேயே இருப்பதாகவும் கூறினர்.இவ்வாறு அன்று பிரச்சாரம் செய்தவர் ஜே.வி.பி செயலர் ரில்வின் சில்வா ஆகும்.

இது ஒரு பழைய சம்பவம் என்ற போதும் தற்போதும் அது பொருத்தமுடையதாகவே காணப்படுகின்றது. காரணம் இப்போதும் சந்திரிகா முன்பு தெரிவித்தது போன்று அரசியலமைப்பை மாற்றும் நோக்கில் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றுக்கு ஆயத்தப்படுத்துவதாகும். அத்துடன் அவர் அண்மையில் அதிகாரப் பரவலாக்கலை வழங்க சர்வசன வாக்கெடுப்பை நடத்தவுள்ளதாகவும் அது வெற்றிபெறும் என்ற நம்பிக்கையில் தனது பதவியையே (கதிரை) பந்தயம் வைப்பதாகவும் சூசகமாகத் தெரிவித்தார்.

இந்த சர்வசன வாக்கெடுப்பின் மூலம் மூன்று விடயங்களில் மக்கள் கருத்தறிவது சந்திரிகாவின் நோக்கம் என அரச சட்ட ஆலோசகர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அதாவது சனாதிபதியின் அதிகாரம் கட்டுப்படுத்தப்படவேண்டுமா? என்பதும் இனப்பிரச்சினைத்தீர்வுக்கு அதிகாரப்பரவலாக்கல் வழங்குவதா? என்பதும் புதிய தேர்தல் முறை அவசியமா? என்பதுமே மக்கள் கருத்தறிய முன்வைக்கப் படவேண்டிய விடயங்களாகும்.

இதன்படி நோக்கினால் ஒரு கருத்துக் கணிப்பில் எவ்வாறு மூன்று விடயங்களை முன்வைக்க முடியும் என்ற கேள்வியும் பலரிடம் எழுவதாகத் தோன்றுகின்றது. இன்னும் சிலர் இது மூடி மறைப்பு வேலை என்றும் கருதுகின்றனர். ஆனால் யார் என்ன சொன்னாலும் பண்டாரநாயக்க வம்சத்துக்குரிய அநுரா கருத்துக்கணிப்பு நடத்துவதில் தவறு இல்லை என்று கூறுகின்றார். அதைப்போன்று முன்னாள் அமைச்சர் றெஜிரணதுங்க மக்கள் விரும்பினால் சந்திரிகாவே தொடர்ந்து நாட்டின் தலைவியாக இருக்க கருத்துக்கணிப்பு இடமளிக்கிறது என்று தெரிவித்துள்ளார். இவ்வாறு நோக்கினால் தான் தொடர்ந்து பதவியில் இருக்கலாமா? என்ற கருத்தை அறிய சனாதிபதி சந்திரிகா சர்வசன வாக்கெடுப்பு நடத்துவதாக இருக்கலாம். அவ்வாறாயின் மகிந்தராஜபக்ஷவின் நிலை? மகிந்த தனது அரசியல் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்க நடத்தப்படும் வாக்கெடுப்பு இதுவென எண்ணத்தோன்றும். காரணம் சர்வசன வாக்கெடுப்பின்படி அரசியல் அமைப்பை மாற்றினால் சந்திரிகா பிரதமராகப் பதவியேற்பார். இதனால் தனது பிரதமர் பதவிக்கனவு பறிபோகும் என்பதாலாகும். அத்துடன் அவரை நிறை வேற்று அதிகார சனாதிபதியாகப்பார்க்க விரும்பும் அவரது ஆதரவாளர்களின் எண்ணமும் கைகூடாமல் போய்விடும்.

சர்வசன வாக்கெடுப்புத் தொடர்பில் இவர்களது கருத்து இவ்வாறிருக்க ஜே.வி.யினது கருத்து வேறுவிதமாகக் காணப்படுகின்றது. அது கூட்டணியில் இருந்து சந்திரிகா தம்மைத் துரத்திவிட எடுக்கும் முடிவாகக் கருதுகின்றது.

அதேபோன்று வடகிழக்குப்பகுதி மக்கள் இந்த சர்வசன வாக்கெடுப்பின் மூலம் தனது பிரதேசங்களின் நிர்வாக அதிகாரம் தனது கைகளுக்கு எட்டிவிடும் என்று கருதுகின்றனர். காரணம் அரசியலமைப்பில் மாற்றம் கொண்டுவரும் கருத்துக்கணிப்பில் தமிழர் தாயக மக்கள் எதிர்த்து வாக்களித்து அது மொத்த வாக்கெடுப்பில் ஐம்பது வீதமாகும்போது அது அவர்களுக்கென தனியான அரசியலமைப்பைக் கோருகின்றார்கள் என்பது புலனாகிவிடும். இது சர்வதேச சமூகத்திற்கு முன்னெடுக்கப்படும் ஒருகருத்தாகவும் அழுத்தமாகவும் ஆகிவிடும்.

அவ்வாறு நேரிட்டால் இப்பிரதேசம் தனியாக ஒரு ஆட்சி அலகைப் பெற்றுவிடும். அவ்வாறு பெற்றுவிட்டால் இந்தியாவின் நிலை? தமிழர் தாயகப்பிரதேசத்திற்குஆட்சி அதிகாரம் வழங்கினால் இந்தியா பிளவுபடும் என்பதும் இந்தியா இந்த வாக்கெடுப்பில் கொண்டுள்ள அபிப்பிராயமாக இருக்கலாம்


ஆயினும் இந்த சர்வசன வாக்கெடுப்புத் தொடரில் மக்கள் என்ன அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளார்கள் என்பதும் அவர்களுக்குத் தெரியும். மக்கள் எவ்வாறு வாக்களிக்க எண்ணியுள்ளார்கள் தமது நிலைப்பாடு என்னவாகும் என்ற அச்சத்துடனேயே சந்திரிகா காணப்படுகிறார்.

நாட்டின் ஆட்சி அதிகாரத்துக்குள் அவர் பிரவேசித்து பதினொரு வருடங்கள் நிறைவடைகின்றன. அக்காலப்பகுதியில் நான்கு வருடங்களில் மூன்று முறை பாராளுமன்றத்தைக் கலைத்தார். பாராளுமன்ற அமர்வை இருமுறை ஒத்திவைத்தார். இவற்றுக்குக் காரணம் அவர் ஆட்சியமைப்பை மாற்ற வேண்டி இருந்தமையாகும். எனினும் ஒரு வழியிலும் அது நிறைவேறவில்லை என்பதாலேயே தற்போது சர்வசன வாக்கெடுப்புப் பற்றி அறிவித்துள்ளார்.

2001ஆம் ஆண்டு சர்வசன வாக்கெடுப்புக்காக வாக்குச்சீட்டுக்களும் அச்சடிக்கப்பட்டன. எனினும் ஜே.வி.பியினதும், ஐ.தே கட்சியினதும் எதிர்ப்பின் காரணமாக அது கைவிடப்பட்டது.

அதை ஒரு பொய்யான நடவடிக்கை எனக் கூறி ஜே.வி.பி நாடு முழுவதும் பிரச்சாரம் செய்தது. அதன் பலனாகக் கூட்டரசாங்கம் ஒன்று நிறுவப்படுவதற்கான பேச்சுக்கள் நடைபெற்றன. அதன்போது சர்வசன வாக்கெடுப்பை நடத்தாமல் விடுவது என இணக்கம் காணப்பட்டது. அதனை ஜே.வி.பியினர் மக்களின் பணத்தைக் கொள்ளையடிக்கும் அரசியல் அமைப்புக்காக நடாத்தப்பட்ட சர்வசன வாக்கெடுப்பு என்றும், அதனைத் தடுத்து விட்டதாகவும் பெருமையாகக் கூறினர். அவ்வாறாயின் இன்றைய சர்வசன வாக்கெடுப்புப் பற்றி ஜே.வி.பியினரின் கருத்து எவ்வாறு இருக்கும். அன்று இதனை எதிர்ப்பதற்கு ஒரு காரணத்தை வெளியிட்டது. ஆயினும் இன்று சந்திரிகா அரசின் பிரதான பங்காளராகிய அவர்கள் இதனை எதிர்ப்பதற்கான புதிய ஒரு வழியையும் காரணத்தையும் கண்டுபிடிக்கும் நிலையில் இருக்கின்றனர். அத்துடன் இவ்வாறு சர்வசன வாக்கெடுப்பு நடத்த செலவிடப்படும் நிதியும் மக்களின் நிதியே.

எது எவ்வாறெனினும் சந்திரிகாவின் அரசியல் அஸ்தமனத்தை நெருங்கி விட்டதால் சந்திரிகா தொடர்ந்து அரசியலைப் பற்றிப் பிடித்திருக்க தன்னாலான அனைத்து தந்திரோபாயங்களையும் மேற்கொண்டே வருகிறார். இதன் ஒரு கட்டமாகவே ரணில் அரசாங்கத்தின் பதவிக்காலம் முடியும் முன்பாக நாட்டின் பாதுகாப்பு என்ற விசித்திரமான காரணத்தைக் காட்டி பாராளுமன்றைக் கலைத்தார் எனினும் பின்னர் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்றாலும் ஜே.வி.பியினது கூட்டில்லாதிருந்தால் அதிகாரத்துக்கு வந்திருக்க முடியாது.



**உப்புள் ஜோசப் பர்னாந்து**
**(லங்காதீப)**
**தமிழில்- வடிவேல்**

சர்வசன வாக்கெடுப்பை 2001 ஆம் ஆண்டு நடாத்த முற்பட்டவேளை எதிர்ப்புத் தெரிவித்ததையும் மறந்து சந்திரிகா ஜே.வி.பி யுடன் கூட்டு வைத்தமை தனது ஆட்சி அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளவே. ஆயினும் தற்போது சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படுமாயின் நிச்சயம் அரசியல் அமைப்பில் மாற்றத்தை விரும்பும் மக்கள் அதற்குச் சார்பாக வாக்களிப்பர். ஆனால் ஜே.வி.பியினர் ஏதாவது காரணத்தைக் கூறி நடத்தவிடாமல் செய்தாலோ அல்லது எதிர்த்து வாக்களித்தாலோ சந்திரிகாவின் நிலை மோசமாகிவிடும். எனவே சந்திரிகாவைப் பாதுகாப்பது சந்திரிகாவே.

# தமிழீழத் தொலைக்காட்சி சேவைக்கு திருச்சி மொழிப்போர் மாநாட்டில் வாழ்த்து

தமிழீழத் தேசிய தொலைக் காட்சி ஒளிபரப்புக்கு தமிழ்நாட்டு மக்கள் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர்.

திருச்சியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றமூன்றாம் மொழிப் போர் மாநாட்டில் உரை யாற்றிய எழுச்சிக் கவிஞர் அறிவுமதி, தொலைக்காட்சி ஒளிபரப்புச் சேவை குறித்த தகவலை மேடையில் அறிவித்தார். அத்துடன், தமிழ்நாட்டுத் தமிழர்கள் தங்களது ஆதரவைத் தெரிவிக்கும் வகையில் கரவொலி எழுப்பி வாழ்த்துத் தெரிவிக்குமாறும் அறிவுமதி வேண்டுகோள் விடுத்தார். மாநாட்டில் பெருந்திரளாகக் கூடியிருந்த தமிழர்கள், தமிழீழத் தொலைக்காட்சி சேவைக்குத் தங்களது வாழ்த்துகளை கரவொலிகள் மூலம் தெரிவித்தனர்.



சுவீடனில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற சுதந்திர தாகம் நிகழ்வின் காட்சிகள்

-மே.மாத நடுப்பகுதியில்-

# ஜே.வி.பி அமைச்சர்களைத் தவிர ஏனைய அமைச்சர்களுக்குப் பொறுப்பு மாற்றம்

வரும் மே மாதம் நடுப்பகுதியளவில் சந்திரிகா கூட்டணி அமைச்சரவையில் பெரும் மாற்றத்தைக் கொண்டுவர அரசு தீர்மானித்துள்ளது.

இதன்படி ஜே.வி.யினருக்கு வழங்கப்பட்ட அமைச்சுப்பதவிகளைத் தவிர ஏனையோருக்கு வழங்கப்பட்ட அமைச்சுப்பொறுப்பில் மாற்றம் கொண்டுவரப்படலாம் எனவும் ஊடகத்துறை அமைச்சு சனாதிபதியின் கீழ் கொண்டுவரப்படலாம் என்றும் அரச உயர் அதிகாரி ஒருவர் லங்காதீபவாரப் பத்திரிகையிடம் தெரிவித்துள்ளார்.

மேலும் ஆறுமுகம் தொண்டமானுக்கும் முக்கிய அமைச்சுப் பதவி வழங்கப்படவிருப்பதாகவும் பிரதியமைச்சர்கள் சிலர் அமைச்சரவைக்குள் உள்வாங்கப்படுவர் என்றும் தெரிய வருகிறது.

# புதிய கட்டடம் திறப்பு விழா

(அலுவலகசெய்தியாளர்)

முல்லை பாலிநகர் மகாவித்தியாலய புதிய கட்டடத் திறப்பு விழா நாளை நண்பகல் 12.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மகா வித்தியாலய முதல்வர் து. யேசுதானந்தர் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் தமிழீழ கல்விக்கழக பொறுப்பாளர் வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவலர்கள் விளையாட்டுத்துறை செயலர் நிகொட் திட்டபிரதிநிதிகள் , முல்லை அரச அதிபர் மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(சோ)

**17.**


☛ கென்யத் தலைநகர் நைரோபியில் கூடிய சோமாலியாவின் நாடாளுமன்றக் கூட்டத்தில் கருத்து வேறுபாடு எழுந்ததன் காரணமாக பெரும் களேபரம் எழுந்தது.

☛ ஆப்கானிஸ்தானிலுள்ள கண்டஹர் நகரில் இரு இடங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 5பேர் பலி; 31 பேர் காயம்.


☛ கிழக்கு சீனாவிலுள்ள ஹெபாய் நகரில் ஏழை விவசாய தம்பதியினருக்கு ஒட்டிப்பிறந்த இரண்டு ஆண் குழந்தைகள் பிரிக்கும் சிகிச்சை இடம் பெறுவதற்கு முன்பு நுரையீரல் தொற்று நோய் ஏற்பட்டு மரணம்.

**18.**

☛ தமிழகத்தின் இராமநாதபுரம் மாவட்டம் . ஏர்வண்டியைச் சேர்ந்த நபர் ஒருவரின் 120 ஆடுகள் தண்டவாளத்தில் மேய்ந்து கொண்டிருந்தபோது திருச்சியில் இருந்து லால்குடி நோக்கிச் சென்று கொண்டிருந்த தொடருந்துடன் மோதி 80 ஆடுகள் பலி.



☛ குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடிக்கு அமெரிக்கா விசாவழங்க மறுத்ததைக் கண்டித்து பாரதிய ஜனதா கட்சி ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம்.



☛ அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் அமைப்பான ஜி.20 அமைச்சர்கள் மாநாடு இந்தியத் தலைநகர் புதுடில் லியில் ஆரம்பம். இதில் 20 நாடுகளின் அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

☛ சீனாவுக்கான பாகிஸ்தானின் புதிய தூதுவராக சல்மான் பஷீர் பாகிஸ்தானால் நியமிக்கப்பட்டார்.

☛ மத்திய பாகிஸ்தானில் டிராக்டர் வண்டியொன்று மலைப் பாதையிலிருந்து விலகிப் பள்ளத்தாக்கில் ஓடும் ஆற்றுக்குள் விழுந்து விபத்துக்குள்ளானதில் 50 பேர் பலி நால்வர் காணாமல் போயினர்.

☛ லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் கிழக்குப் பகுதியிலுள்ள குடியிருப்புப் பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஆறுபேர் படுகாயம்.




**19.**

☛ சீனாவில் சான்ஸி மாகாணத்தில் ஷீஷீ நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 59 தொழிலாளர்கள் பலி.

☛ பாகிஸ்தான் 2000 கிலோ மீற்றர் பாயக் கூடிய சாஹின்-2 என்ற ஏவுகணையை பரிசோதித்தது.

☛ பாகிஸ்தானில் ஷியா முஸ்லிம் களுக்கும் சன்னி பிரிவு முஸ்லிம் களுக்குமிடையே மோதல் இடம் பெற்றவேளை மசூதியில் தொழுகையில் ஈடுபட்டிருந்த 35 பேர் பலி.

**20.**




☛ ஈராக்கில் அமெரிக்கப் படைகள் காலடி வைத்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தி யடைவதை முன் னிட்டு ஈராக் போருக்கு எதிர்ப் புத் தெரிவித்து அவுஸ்திரேலியா வின் சிட்னி நகரில் பொது மக்கள் பேரணி இடம் பெற்றது.

☛ அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்திலுள்ள கீவெஸ்ட் நகரில் சங்கு ஊதும் போட்டி இடம்பெற்றது. இதில் 40 பேர் பங்கேற்றனர்.



☛ கிர்கிஸ்தானில் சனாதிபதிக் கெதிராக எதிர்க்கட்சிகள் கிர்ஜிஸ் நகரில் ஆர்ப்பாட்டம்.



☛ ஆப்கானிஸ்தானில் பெய்த கடும் மழையினாலும், பனி உருகி ஓடியதனாலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு 200 பேர் பலி; ஆயிரக்கணக்கான வீடுகள் இடிந்து வீழ்ந்தன.

☛ அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொண்டலிசாரைஸ் சீனாவின் தலைநகரான பீஜிங்கில் சீன அதிபர் ஹூஜிந்தாவே பிரதமர் லென்ஜியாபோ ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

☛ பாகிஸ்தான் சிறையில் அடைக் கப்பட்ட 529 இந்திய மீனவர்கள் உட்பட 533 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

☛ கட்டாரின் தலைநகர் டோகா விலுள்ள பிரிட்டிஷ் பாடசாலைக்கருகிலுள்ள நாடக அரங்கத்திற்கு அருகில் கார்க் குண்டு வெடித் ததில் ஒருவர் பலி; 12 பேர் காயம்.

☛ பலஸ்தீனத்தின் மேற்கு கரைப் பகுதியில் இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினர் மீது பலஸ்தீன தீவிரவாதிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் நான்கு இஸ்ரேலிய வீரர்கள் காயம்.



☛ தென்தாய்லாந்தின் தென்பகுதியில் யாலவிலுள்ள முயாங் மாவட்டத்தில் ரயில்வே பகுதி ஒன்றிலும், நராத்திவரட் எனுமிடத்திலும் குண்டு வெடித்ததில் 11பேர் காயம்.


☛ பங்களாதேஷில் கைபாந்தா மற்றும் ரங்கபூர் மாவட்டங்களில் கடும் சூறாவளி வீசியதன் காரணமாக 25 பேர் பலி ;500 பேர் படுகாயம்.

☛ ஜப்பானின் தென் பகுதியி லுள்ள கியூஸத் தீவில் ஏற்பட்ட பூகம்பத்தில் 290 பேர் படுகாயம். கட்டடங்கள் பலவும் சேதம். இது ரிச்டர் அளவு கோலில் ஏழு புள்ளியாகப் பதிவாகியது.



**21.**


☛ புதுடில்லியில் அனைத்து மாநில சட்டசபை சபாநாயகர் கூட்டம் சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி தலைமையில் லோக்சபாவில் இடம்பெற்றது.







**17.03.2005-23.03.2005**

☛ ஈராக்கின் மொசூல் நகரில் வீதியோரக் கண்ணிவெடியில் அமெரிக்க இராணுவ வாகன மொன்று சிக்கியதில் சிலர் காய மடைந்தனர்.



☛ அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சின்செயலர் கொண்டலிசாரைஸிற்கும், ,சீன வெளியுறவுத்துறை அமைச்சர் தலைமை யிலான குழுவிற்குமிடையில் சீனத் தலைநகர் பீஜிங்கில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதன்போது அணுவாயுத பரவல் தடைகுறித்துப் பேச்சுவார்த்தையில் வடகொரியாவைக் கலந்து கொள்ளச் செய்ய சீனா முயற்சிக்க வேண்டுமென கொண்டலிசாரைஸ் வலியுறுத்தியுள்ளார்.



☛ அமெரிக்காவின் மினெஸோடா மாநிலத்தில் பாடசாலை மாணவர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஆசிரியர் மாணவர்கள் உட்பட ஆறுபேர் பலி ; 12பேர் காயம்.

☛ இஸ்ரேல் படையினரின் கட்டுப் பாட்டில் இருந்த பலஸ்தீனர்களின் துல்க்காம் நகரம் பலஸ்தீனர்களிடம் ஒப்படைக் கப்பட்டது.



☛ வட வியட்னாமில் கபேங் மாகாணத்தில் கடும் புயல் காரணமாக ஐந்துபேர் பலி; ஏழு பேர் காயம் மேலும் 14 வீடுகளும், நான்கு பாடசாலைகளும் சேதமாக்கப்பட்டன.



**22.**

☛ தமிழ்த்திரையுலகின் பிரபல நடிகர் ஜெமினி கணேசன் தனது 84 ஆவது வயதில் காலமானார்.


**23.**

☛ அரபுநாடுகளின் தலைவர்கள் கூட்டம் அல்ஜீரியாவில் இடம்பெற்றது. இதில் 22 அரேபிய நாடுகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

☛ லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் மூவர் உடல் சிதறிப்பலி: பலர் படுகாயம்.



☛ அமெரிக்காவின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் திடீரென வெடித்துத் தீப்பிடித்ததில் 14 பேர் பலி ;100 பேர் காயம்.



☛ கொலம்பியாவின் பின்தங்கிய பிரதேசமான புடுமாயோவின் காட்டுப் பகுதியில் இராணுவ வாகனம் சென்று கொண்டிருந்தபோது திடீரென குண்டு வெடித்ததில் வாகனத்தில் பயணித்த 10 பேர் பலி.

☛ கம்போடியாவின் சோம்பேங்சாம் மாநிலத்தில் சிறையிலிருந்து தப்பியோட முயன்ற 16 கைதிகள் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பலி.

☛ பாகிஸ்தான் தேசியதினம் மிகப் பிரமாண்டமான முறையில் கொண்டாடப்பட்டது.



# கிழக்கில் போராளிகள் தாக்கப்பட்ட சம்பவங்களை ஆராயும் சனாதிபதி ஆணைக்குழுவின் கண்துடைப்பிற்கு எதிர்ப்பு

## - சாட்சியமளிக்க எவரும் முன்வரவில்லை

விடுதலைப் புலிப் போராளிகள் மீது மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அண்மைக் காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களின் பின்னணி குறித்து ஆராய்வதற்காக சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக் குழு முன்னிலையில் சாட்சியமளிப்பதற்கு எவரும் முன்வரவில்லை.

கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதிக்கும், மார்ச் மாதம் இரண்டாம் ஆம் திகதிக்குமிடைப்பட்ட காலத்தில் விடுதலைப்புலிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களின் பின்னணி குறித்து ஆராய நியமிக்கப்பட்டுள்ள இவ் ஆணைக் குழுவின் விசாரணைகள் இன்று முதல் முதலாம் திகதி வரை அம்பாறை நீதிமன்ற கட்டடத் தொகுதியிலும், நான்காம் திகதி முதல் எட்டாம் திகதி வரை மட்டக்களப்பு நீதிமன்ற கட்டடத் தொகுதியிலும் நடைபெறவிருக்கின்றமைதெரிந்ததே..

ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க விரும்பும் விடுதலைப்புலிகள், பொதுமக்கள், படையினர் மற்றும் பொலிஸ் எனக் குறிப்பிட்ட தரப்பினரிடமிருந்து பத்திரிகை அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் செயலாளரினால் கோரப்பட்டிருந்தன.

இதற்கான கால அவகாசம் கடந்த வியாழக்கிழமைவரை வழங்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை எவரும் விண்ணப்பிக்கவில்லை. இருப்பினும் அம்பாறை மாவட்ட போர் நிறுத்த தலைமைக் கண்காணிப்பாளர் ஜின்ஸ் பங், மட்டக்களப்பு மாவட்ட தலைமைக் கண்காணிப்பாளர் ஸ்டீன் ஜோர்ன்சன் ஆகியோர் மட்டுமே சாட்சியமளிக்க விண்ணப்பித் துள்ளனர்.

வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதனை தலை வராகக் கொண்ட இவ் ஆணைக் குழுவில் உறுப்பினராக அம்பாறை மேல்நீதிமன்ற நீதிபதி டபிள்யூ.ரி. எம்.பி வெரவெவ, செயலாளராக அம்பாறை மேல்நீதிமன்ற பதிவாளர் ஏ.ஆர்.எம். கலீல் ஆகியோர் இடம் பெறுகின்றனர். குறிப்பிட்ட காலப்பகுதியில் பெப்ரவரி மாதம் நான்காம் திகதி கிரானில் போராளி நிவேசன் எனப்படும் சின்னத்துரை தேவநாதன் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதே மாதம் ஏழாம் திகதி விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த கௌசல்யன் உட்பட நான்கு போராளிகளுடன் மேலும் இருவர் வெலிக்கந்தவில் படுகொலை செய்யப்பட்டனர். 28 ஆம் திகதி அம்பாறை மாவட்டம் தம்பட்டையில் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் குவேனி உட்பட மூன்று பெண் போராளிகள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு கொலை முயற்சி போன்ற முக்கிய சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. சாட்சியமளிக்க யாராவது முன்வருவார்கள் என சிறிலங்கா அரசு எதிர்பார்த்திருந்த போதிலும், பல்வேறு தரப்பினரும் அதனை முற்றாக நிராகரித்திருப்பதானது அரசாங்கத்திற்கு பலத்த அடியாக அமைந்து விட்டது எனப் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். இன்று ஆரம்பமாகவிருக்கும் இவ் ஆணைக் குழு அமர்வின் போது, இக்கால சம்பவங்கள் தொடர்பாக விசாரணை அறிக்கைகளுடன் வருமாறு கிழக்குப்பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் நெவில் விஜயசிங்க, வட மத்திய மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் ஜயந்த கமகே மற்றும் பொலிஸ் அத்தியட்சகர்கள் உட்பட மட்டக்களப்பு, அம்பாறை, பொலநறுவை மாவட்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களின் அறிக்கையை அடுத்து சாட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ் ஆணைக்குழு நியமனம் வெறும் கண்துடைப்பு எனதமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற் கனவே நிராகரித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# மத்தியபோக்குவரத்து சபை தலைவர் பதவி விலகல்

மத்திய போக்குவரத்து சபையின் தலைவர் ஐ எஸ் ஜெயரத்ன நேற்றுமுன்தினம் தமது பதவியில் இருந்து விலகியுள்ளார். அவர் போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவிடம் தமது பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விளக்கம் தருகையில்,

தமக்கு பல தரப்புகளில் இருந்தும் விடுக்கப்பட்டுள்ள அழுத்தமே பதவி விலகலுக்குத் காரணமாகும். இதன் அடிப்படையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் எனது பதவி விலகல் கடிதத்தை போக்குவரத்து அமைச்சரிடம் கையளித்துள்ளதாகத் தெரிவித்தார்

இதற்கிடையில் போக்குவரத்து சபையை மீண்டும் அமைப்பதென தாம் முடிவெடுத்துள்ளதாக தெரிவித்திருந்த ஐ. எஸ் ஜெயவர்த்தன இதன் நிமித்தம் கொண்டு வரப்பட்டுள்ள நஷ்டஈட்டு நியமத்தின்படி 15 ஊழியர்கள் வரை தமது பணிகளில் இருந்து விலகிச்செல்வார்கள் எனக் குறிப்பிட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# சமாதான நகர்வும் பொதுக்கட்டமைப்பும் விரைவாக முன்னெடுக்கப்படும்

## - சனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

சமாதான நகர்வும், பொதுக்கட்டமைப்பும் விரைவாக முன்னெடுக்கப்படும் என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார். சுனாமியின் பின்னர் நிவாரணங்கள் விநியோகிக்கப்படுவதற்கு பொதுக்கட்டமைப்பு அவசியம். எனவே அதனை அமைப்பதற்கான அனைத்துப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதே வேளை இதன் மூலம் சமாதான நகர்வுகளையும் உரிய வகையில் முன்னெடுக்க முடியும் என சனாதிபதி குறிப்பிட்டுள்ளார். நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (32)

# சுனாமி நிவாரண நிதியாக ரூ10.5 பில்லியன் கிடைத்தது

10.5 பில்லியன் ரூபா, சுனாமி நிவாரண நிதியாக வெளிநாடுகளிலிருந்து சிறிலங்காவுக்கு வந்துள்ளதாக கொழும்பு மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதிலே 1.4 பில்லியன் ரூபாய்க்கும் அதிகமாக சிறிலங்கா அரசுக்கு நேரடியாக மத்திய வங்கியூடாக வழங்கப்பட்டுள்ளது. மீதித்தொகை, அரச சார்பான உதவி நிறுவனங்களுக்கும், அரச சார்பற்ற பொது உதவி நிறுவனங்களுக்கும் மத்திய வங்கியூடாக வழங்கப்பட்டதாக கொழும்பு மத்திய வங்கி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# இனந்தெரியாதோரின் தாக்குதலில் ஐயன்கேணியில் இளைஞர் காயம்

மட்டக்களப்பு மாவட்டம் ஐயன்கேணியில் நேற்றுமுன்தினமிரவு 23 வயது இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுடப்பட்டு காயங்களுடன் ஏறாவூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட கரடியனாற்றைச் சேர்ந்த சரவணமுத்து சிவராசா என்ற இந்த இளைஞர் உறவினரின் வீட்டிற்குச் சென்று திரும்புகையில் இந்தத் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. ரமேஸ்புரத்திலுள்ள உறவினரின் வீட்டிற்கு சென்று துவிச்சக்கரவண்டியில் திரும்பிக் கொண்டிருக்கையில் இவரை வழிமறித்த நபர்கள் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இது தொடர்பாக ஏறாவூர் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.


**பூநகரி ப.தெ.வ.அ.கூ.சங்கம்**

**40ஸ்ரீ 0774 இசுசு நல்ல நிலையிலுள்ள பாரஊர்தி**

**பகிரங்க ஏல விற்பனை**

30.03.2005 நல்ல நிலையிலுள்ள எமக்குச் சொந்தமான இரண்டு புத்தகப் பதிவுகளும் உடைய 40ஸ்ரீ0774 இலக்க பாரஊர்தி பகிரங்க ஏல விற்பனை மூலம் எதிர்வரும் 30.03.2005 இல் காலை 11.00மணிக்கு கரைச்சி வடக்கு ப.நோ.கூ சங்க பாரஊர்தி தரிப்பிடத்தில் [பரந்தன் சந்தி] வைத்து விற்பனை செய்யப் படவுள்ளது. கொள்வனவு செய்ய விரும்புவோர் மீளளிப்பு வைப்பாக ரூபா.1000/= செலுத்தி கேள்வியில் பங்கு கொள்ளலாம். பாரஊர்தியினை பரந்தன் பாரஊர்தி தரிப்பிடத்தில் எதிர்வரும் 30.03.2005 காலை 10.00 மணி வரை இன்றில் இருந்து கடமை நேரங்களில் பார்வை யிடலாம். தெரிவு செய்யப்படுபவர் மூன்று நாட்களுக்குள் முழுப்பணத்தையும் செலுத்தி பாரஊர்தி யினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
பூநகரி ப.தெ.வ.அ,
கூட்டுறவுச் சங்கம்,
பூநகரி.

(சி.11608)



**Job Opening Female Translator**

**(Tamil- English - Tamil)**

**Medecins du Monde -France**
**Mallavi Hospital Project**
**Mullaitivu District**

Seeking Female translator (tamil to English to Tamil )For Help with the medecins du monde France (International NGO) project at the mallavi hospital in mallavi ,mullaitivu District.the translator will work primarily with the midwife but would also help the rest of our medical team. opening immediately. please send CV and bio data to christi Denton, c/o MDM, Mallavi Hospital, Mallavi.

(5884)



**முதலாவது அகவையில் பிறந்தநாள்**

**சுனாமியின் மூன்றாவது மாதம்**



**இராசரத்தினம் சகிதன்**

பிறப்பு 28.03.2004 - இறப்பு 26.12.2004

மேகம் வெள்ளொளி தனைப்பரப்ப
பகலோன் தன்னொளி வீசுமுன்னே
பறித்த சுனாமியின்
மதிநிறை நன்னாள் மார்கழி இருபத்தா
றடங்காத்தாண்டவத்தி லகப்பட்டானெம் செல்வம் சகி
துவியும் தசமும் இணைந்த திங்கள்
பறந்திட்ட இந் நாளில் - எம்
மகவி னான்மா பெறுக சாந்தியே!

உன் நினைவுத்துயரில்
அப்பா அம்மா

நி.முகவரி
செ. நிமல்ராஜ்
(செல்வன்)
செல்லையா பல்பொருள் வாணிபம்,
முல்லைத்தீவு.

த.முகவரி
த.செல்லையா,
குமுழமுனை , முள்ளியவளை. (5894)

# சுனாமிக்குப்பின் இந்திய புவியியல் மாற்றங்கள்

## -அதிர்ச்சித் தகவல்

(சென்னை)

**சுனாமி ஏற்பட்ட பிறகு பூமியில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. இது பற்றி புவியியல் வல்லுனர்கள் தொடர்ச்சியாக ஆய்வுகள் மேற்கொண்டு வருகின்றார்கள். ஹைதராபாத்திலுள்ள தேசிய புவி இயற்பியல் ஆராய்ச்சி மையம் நடத்திய ஆய்வுகளின் முடிவில் பல அதிர்ச்சித் தகவல்களை வெளியிட்டுள்ளது.**


தமிழக கடற்கரை

பெங்களூருக்கும் சுமத்திராத் தீவிலுள்ள மடான் நகருக்கும் உள்ளதூரம் 12 சென்ரிமீற்றர் குறைந்து இருப்பது உறுதி செய்யப்பட்டு இருக்கிறது. அதோடு இந்தியா, இந்தோனேஷியாவை நோக்கி 12 சென்றி மீற்றர் நகர்ந்துள்ளது. இந்திய- பர்மியத்தட்டில் ஏற்பட்டுள்ள விரிசலே இதற்குக் காரணம் என்று ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டு இருக்கிறார்கள். சுனாமிப் பேரலைகளுக்கு முன்னர் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பர்மியத்தட்டு, இந்திய தட்டு இடையேயான பகுதியில் 15 மீற்றர் ஆழத்துக்கு விரிசல் ஏற்பட்டு இருக்கின்றது. இந்தவிரிசல் காரணமாக பர்மியத் தட்டு, இந்தியத் தட்டை அழுத்திக் கொண்டு இருப்பது உறுதிசெய்யப்பட்டு இருக்கிறது. அது எப்போது வேண்டுமானாலும் பூமிக்குள்சரிய வாய்ப்பு இருப்பதாக அதிர்ச்சி தரும் தகவல் வெளியாகி இருக்கிறது.

இந்த விரிசல் காரணமாகவே அந்தமானில் தொடர்ந்து நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன. சுனாமிக்குப்பிறகு 200 முறை இந்தப் பகுதியில் நிலஅதிர்வு ஏற்பட்டு இருக்கிறது.

இந்தியத்துணைக் கண்டத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் பூமி ஓட்டில் எந்த நேரத்திலும் சரிய வாய்ப்பு இருக்கிறது. அது போன்ற நிகழ்வு ஏற்படும்போது தமிழக கடலோர பகுதி பெரும் பாதிப்பைச் சந்திக்க நேரிடும். அதாவது சென்னை முதல் கன்னியாகுமரி வரையுள்ள கடலோரப் பகுதிக்குள் கடல் நீர் புகுந்து விடும் வாய்ப்பு ஏற்படும்.அந்த நிலை ஏற்பட்டால் குமரி, தூத்துக்குடி, நெல்லை மாவட்ட கடலோரப் பகுதிக்கும் பெரும் சேதம் ஏற்படும். மேலும் அரபிக்கடல் சார்ந்த கேரள கடலோரப் பகுதியில் புதிய நிலப் பரப்புக்கள் தோன்றிவிடும்.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து மலைப்பகுதியிலும் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. குறிப்பாக சேலம், ஏற்காடு, நீலகிரி, கொடைக்கானல் உள்ளிட்ட மலைப் பகுதிகளில் நிலபரப்பில் மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கிறதா? என்பதைப் பற்றி இந்திய புவியியல் துறை ஆய்வு நடத்தினால் உண்மை நிலைமை தெரியவரும். மலைப் பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட வாய்ப்பு உள்ளதால் இது தொடர்பான ஆய்வு அவசியமானது என்று எச்சரிக்கப்பட்டு இருக்கிறது.

# எமது போர் விமானங்கள் இந்தியாவிற்கும் விற்கப்படும்

## -அமெரிக்கா தெரிவிப்பு

(புதுடில்லி)

அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு வழங்கவுள்ளதாக அறிவித்த எப்-16 ரக


எப்–16ரக விமானங்கள்

போர் விமானங்களை விட வலுவுள்ள எப்-18ரக போர் விமானங்களை இந்தியாவிற்கு விற்க உள்ளதாக அமெரிக்கா அறிவித்திருக்கிறது.

பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையில் பாகிஸ்தானை தனக்கு மிக நெருக்கமான நட்பு நாடாக அமெரிக்கா கருதுகிறது. இதையொட்டி பல முனை செயற்பாடு கொண்ட அதிநவீன எப்-16 ரக போர் விமானங்களை பாகிஸ்தானுக்கு விற்பனை செய்ய அமெரிக்கா முடிவு செய்தது. அமெரிக்காவின் இந்த முடிவை அதிபர் ஜோர்ஜ்புஷ் பிரதமர் மன்மோகன்சிங்குடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிவித்தார். அதற்கு மன்மோகன்சிங் தனது அதிருப்பியை புஷ்சிடம் தெரிவித்தார். அந்த விமானங்கள் இந்தியாவுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும என்று புஷ்சை எச்சரித்தார்.

பாகிஸ்தானுக்கு எப்-16 ரக விமானம் விற்க எடுத்த முடிவை அமெரிக்கா வெளியுறவு அமைச்சர் கொண்டலிசாரைஸ் மியான்மரில் (பர்மா) சுற்றுப் பயணம் மேற்கொண்டு இருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங்கிடம் தொலைபேசியில் தெரிவித்தார். அப்போது நட்வர்சிங்கும் தனது அதிருப்தியைத் தெரிவித்தார். இந்த எப்-16 ரக விமானம் ஒன்றின் விலை 4 கோடியே 30 லட்சம் இந்திய ரூபா ஆகும். இந்த விமானங்கள் ரஷ்யாவின் கடைசி தயாரிப்பான மிக்- 29ரக விமானங்களை விட சக்தி வாய்ந்தவை. பாகிஸ்தானுக்கு எப்-16 ரக விமானங்கள் வழங்கல் செய்ய இந்தியா எதிர்ப்பு தெரிவித்ததைத் தொடர்ந்து இந்தியாவை திருப்திப்படுத்தும் வகையில் இந்தியாவுக்கு எப்-18 ரக போர் விமானங்கள் வழங்க அமெரிக்கா முன் வந்துள்ளது. இந்த ரக விமானங்களை அமெரிக்கா இதுவரை எந்த வெளிநாட்டுக்கும் விற்றது கிடையாது இவை எப்-16 ஐ விட சக்தி வாய்ந்தவை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# தூத்துக்குடி கப்பலில் திடீர் தீ

(தூத்துக்குடி)

கொழும்பிலிருந்து தூத்துக்குடித் துறைமுகத்திற்குச் சென்ற கப்பல் ஒன்று திடீரென தீப்பிடித்துக் கொண்டது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது நேற்று முன்தினம் அதிகாலை கொழும்புத்துறைமுகத்தில் இருந்து எக்ஸ்பிரஸ் காவேரி என்ற கப்பல் 498 சரக்குப் பெட்டகங்களை ஏற்றிக்கொண்டு தூத்துக்குடித் துறைமுகம் நோக்கிச் சென்றுகொண்டு இருந்தது. கப்பலில் கப்டன் உட்பட 22 ஊழியர்கள் பணியில் இருந்தனர். கப்பல் தூத்துக்குடித் துறைமுகத்திலிருந்து 35 கடல் மைலுக்கு அப்பால் செல்லும் போது காலை 10.30 மணிக்கு இயந்திரத்தில் திடீரெனத் தீப்பிடித்தது. கப்பலில் தீப்பிடித்தது பற்றி அதன் கப்டன் தூத்துக்குடி, கொழும்பு ஆகிய துறைமுகங்களுக்குத் தகவல் தெரிவித்தார். அதன் பேரில் தூத்துக்குடிக் கடலோரக் காவல்படை அதிகாரிகள் நாகதேவி என்ற கப்பலில் விரைந்தனர். இதில் தீயணைப்புப்படை வீரர்களும், மருத்துவக் குழுவினரும் சென்றனர். மேலும் தூத்துக்குடித் துறைமுகத்தில் இருந்து மூன்று இழுவைக் கப்பல்களும் விரைந்தன.

தீயணைப்பு வீரர்கள் பிற்பகல் ஒரு மணிக்குக் கப்பலின் இயந்திரத்தில் பிடித்த தீயை முழுமையாக அணைத்து கட்டுப்படுத்தினர். தூத்துக்குடித் துறைமுகத்தில் கப்பலில் பழுதான பகுதியை சரிபார்க்கும் வசதி இல்லாததால் தூத்துக்குடித் துறைமுக இழுவைக் கப்பல் மூலம் கொழும்புத் துறைமுகத்துக்கு சரக்கு பெட்டகக் கப்பல் கொண்டு செல்லப்படுவதாக கப்பல் நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

# கலாமுக்கு குழந்தைகள் வாழ்த்து


அப்துல்கலாம்

(புதுடில்லி)

ஹோலிப் பண்டிகையையொட்டி சனாதிபதி கலாமுக்கு குழந்தைகள் நேரில் வாழ்த்துத் தெரிவித்தனர்.

இந்தியா முழுவதும் நேற்று முன்தினம் ஹோலிப் பண்டிகை உற்சாகமாகக் கொண்டாடப்பட்டது. இதை முன்னிட்டு டில்லியில் நேற்று முன்தினம் 100 குழந்தைகள் சனாதிபதி மாளிகைக்குச் சென்று சனாதிபதி அப்துல்கலாமுக்கு நேரில் வாழத்துத் தெரிவித்தனர். இக் குழந்தைகளைச் சனாதிபதி மொகல் பூந்தோட்டதுக்கு அழைத்துச்சென்று அங்குள்ள பூக்களைச்சுற்றிக் காட்டினார். மொகல் பூந்தோட்டத்தின் புகைப்படங்களையும் குழந்தைகளுக்கு அளித்தார்.

# ஹோலிப்பண்டிகையில் மூவர் படு கொலை

ஹோலிப்பண்டிகையின்போது நடந்த தகராறில் மூன்றுபேர் கொலை செய்யப்பட்டனர். பலர் படுகாயம் அடைந்தனர். உத்தரப்பிரதேச மாநிலம், ஹபிகான்ஜ் பகுதியில் நடந்த ஹோலி பிரார்த்தனையின்போது இருவருக்கு இடையில் தகராறு ஏற்பட்டது இதில் கரன் சிங் என்பவர் சுட்டுக் கொல்லப் பட்டார். மேலும் கோரக்பூர் என்ற இடத்தில் மாட்டுச் சாணியை ஒருவர் மீது ஒருவர் வீசியதில் தகராறு ஏற்பட்டு தயாராம் என்பவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார் திரிபுரா மாநிலத்தின் எல்லையோர காலம்சாரா கிராமத்தில் எல்லைப் பாதுகாப்புப் படைவீரர் ஹோலி விளையாட வருமாறு சில இளைஞர்களை அழைத்தார். ஆனால் அவர்கள் விளையாட வர மறுத்ததால் ராணுவ வீரர் அவர்களை நோக்கித் துப்பாக்கியால்சுட்டார். இதில் ஒரு வாலிபர் பலியானார் ஓட்டுமொத்தமாக ஹோலிப் பண்டிகை தகறாறில் நேற்று மூன்று பேர் கொலை செய்யப்பட்டனர். மேலும் ஒரு சில இடங்களில் நடந்த வன்முறையில் ஏராளமானோர் படுகாயமடைந்தனர்.

# நரேந்திரமோடி இங்கிலாந்து செல்லாதது ஏன்?

## –பரபரப்பான புதிய தகவல்–

(புதுடில்லி)

இங்கிலாந்தில், குஜராத் முதல்வர் மோடியை கைது செய்ய ஏற்பாடு நடந்துள்ளது. அதனால் தான் அவர் இங்கிலாந்துப் பயணத்தை ரத்துச் செய்துவிட்டார். என்ற புதிய தகவல் கிடைத்துள்ளது. கடந்த 25ஆம் திகதி இங்கிலாந்து செல்ல இருந்த குஜராத் முதல்வர் நரேந்திரமோடி கடைசி நேரத்தில் தனது பயணத்தை ரத்துச்செய்தார்.

இங்கிலாந்தில் மோடியின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதால் அவர் பயணத்தை தவிர்ப்பது நல்லது என்று மத்திய அரசு கூறிய யோசனையைத் தொடர்ந்து மோடி தனது பயணத்தை ரத்துச் செய்தார். இந்த நிலையில் மோடியின் பயணம் ரத்து ஆனதற்குப் புதிய காரணம் ஒன்று சொல்லப்படுகிறது. குஜராத் கலவரத்தின்போது இங்கிலாந்தைச் சேர்ந்த தாவூத்கான் என்பவரின் இரண்டு மகன்கள் அகமதாபாத்தில் படுகொலை செய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் இங்கிலாந்து குடியுரிமை பெற்றவர்கள். இந்தியாவில் உள்ள உறவினர்களைப் பார்க்க சென்ற போது கலவரத்தில் சிக்கி உயிரிழந்தனர்.

தனது மகன்கள் படுகொலைக்காக முதல்வர் மோடிமீது இங்கிலாந்து நீதிமன்றில் வழக்குத் தொடர தாவூத்கான் முடிவு செய்திருந்தார். அதற்காகத் தனது வழக்கறிஞர் மூலம் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்ய ஏற்பாடு செய்துவந்தார்.

முஸ்லிம் ஒளி என்ற அமைப்பு ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் பேசிய தாவூத்கான் இதை வெளிப்படையாக அறிவித்தார். மோடி மீது இங்கிலாந்தில் எந்த வழக்கும் நிலுவையிலில்லை. ஆனால் தாவூத்கான் மகன்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் மோடியைக் கைது செய்ய இங்கிலாந்து நீதிமன்றம் அனுமதி வழங்கிவிட்டால் மோடி இங்கிலாந்துப் பொலிசாரால் கைது


நரேந்திரமோடி

செய்யப்படும் சூழ்நிலை உருவாகும் இது பற்றி இங்கிலாந்து அரசு அதிகாரிகள் இந்தியத் தூதரகத்கத்திற்கு தெரியப்படுத்தினார்கள் அந்தத் தகவலை இந்தியத்தூதரகம் இந்திய அரசுக்குத் தெரிவித்தது. அதன் காரணமாகவே மோடியின் பயணம் ரத்துச் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதற்குமுதல் அமெரிக்காவும் நரோந்திரமோடியை தனது நாட்டிற்கு வரவிடாமல் தடைசெய்தது குறிப்பிடத்தக்கது.

# பெண்கள்,குழந்தைகள் கடத்தப்படுவதை தடுக்காவிட்டால் பொருளாதாரத்தடை

## -இந்தியாவிற்கு அமெரிக்கா எச்சரிக்கை


(புதுடில்லி)

குழந்தைகள் மற்றும் பெண்கள் கடத்தப்படுவதை இந்தியா கட்டுப்படுத்தத் தவறினால் அமெரிக்க நாட்டின் பொருளாதாரத் தடைகளை எதிர்கொள்ள நேரிடும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

அமெரிக்காவின் கடத்தல் மற்றும் வன்முறை பாதுகாப்புச் சட்டத்தின்படி பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்தலைக் கட்டுப்படுத்தும் நாடுகள் மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. கடத்தல்காரர்களுக்கு நீதிமன்றங்கள் மூலம் அதிக அளவில் தண்டனை வாங்கிக்கொடுத்த நாடுகள் முதல் இடத்திலும், கடத்தல்காரர்கள் மேல் எந்த நடவடிக்கையும் எடுக்காத நாடுகள் மூன்றாம் தர பட்டியலிலும் உள்ளன. இந்தப் பட்டியலில் இதுவரை இரண்டாம் இடத்தைத் தக்கவைத்த இந்தியா தற்போது மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்படும் நிலை இன்னும் சில மாதங்களில் எட்டி விடும் என்று அதிகாரப்பூர்வத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆகவே வரும் ஜூன் மாதத்தில் இருந்து அமெரிக்க நாட்டின் பொருளாதாரத்தடைகளை இந்தியா எதிர்கொள்ள நேரிடும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது. இதனால் உலக வங்கி ஐ.எம்.எப் போன்ற சர்வதேச நிதி நிறுவனங்கள் இந்தியாவுக்கு இதுவரை வழங்கி வந்த கடன் உதவிகளை நிறுத்த நேரிடும்.

# பெங்களூர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி; இந்தியாவின் வெற்றி இலக்கு 383



இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் பெங்களூரில் நடைபெற்று வரும் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வெற்றிபெற 383 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை பாகிஸ்தான் நிர்ணயித்துள்ளது.

379 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுக்கள் என்ற நிலையில் நான்காம் நாள் ஆட்டத்தை தொடர்ந்த இந்தியா 449 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் லக்ஷ்மன் ஆட்டமிழக்காது 79 ஓட்டங்களைப் பெற்றார். கும்ளே 22 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் கனேரியா ஐந்து விக்கெட்டுக்களையும், சமி மூன்று விக்கெட்டுக்களையும், அப்ரிடி இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்தியாவைவிட 121 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்த பாகிஸ்தான் இரண்டு விக்கெட்டை இழந்து 261 ஓட்டங்களைப் குவித்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் அப்ரிடி அதிரடியாக 26 பந்தில் அரைச்சதம் அடித்தார். கமீட் 76 ஓட்டங்களைப் பெற்றார். இவர்களைவிட யுனிஸ்கான் 84, இன்சமாம் 31 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். வெற்றியிலக்கு நோக்கி ஆடும் இந்தியா நேற்றைய தினம் விக்கெட் இழப்பின்றி 25 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இன்று போட்டியின் இறுதி நாளாகும்.



# ஒக்லாண்ட் டெஸ்ட்;பொண்டிங் சதம் ஸ்திரநிலையில் அவுஸ்திரேலிய அணி



நியூசிலாந்து - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் ஒக்லாண்டில் நடைபெற்று வரும் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி வலுவான நிலையில் உள்ளது.

போட்டியின் இராண்டாம் நாளான நேற்றைய ஆட்டநேர முடிவில் 219 ஓட்டங்களுடன் நியூசிலாந்தை சுருட்டிய அவுஸ்திரேலியா தனது முதலாவது இன்னிங்சிற்காக அணித்தலைவர் பொண்டிங்கின் சத உதவியுடன் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 219 ஓட்டங்களை பெற்றுள்ளது.



199 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்கள் என்ற நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த நியூசிலாந்து மேலும் 91 ஓட்டங்களைப்பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. நேற்றைய ஆட்டத்தில் விக்டோரி அதிகபட்சமாக ஆட்டமிழக்காது 41 ஓட்டங்களை பெற்றார்.

பந்துவீச்சில் மெக்ராத்,வோர்ன் தலா மூன்று விக்கெட்டுக்களையும், கிளெஸ்பி, கஸ்பரோவிச் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

அவுஸ்திரேலியா துடுப்பாட்டத்தில் பொண்டிங் 105 ஓட்டங்களையும்,ஹெயிடன்,மாட்டீன் தலா 38 ஓட்டங்களையும் பெற்றனர். இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

## தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் ஜெரோம் டெய்லர் ஆடமாட்டார்



வரும் வியாழனன்று ஆரம்பமாகும் தென்னாபிரிக்காவுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத்தீவு வீரர் ஜெரோம் டெய்லர் விளையாடமாட்டார் என அறிவிக்கப்படுகிறது. அவருக்கு முதுகில் ஏற்பட்ட காயம் காரணமாக ஆறு வாரங்கள் ஓய்விலிருக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, பிறையன் லாறா உட்பட்ட பல முன்னணி வீரர்கள் பங்குபற்றாத நிலையில் சிப் நாரயண் சந்தர்போல் அணியை வழி நடத்துகிறார்.

# மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் இந்திய, இங்கிலாந்து அணிகள் வெற்றி

WOMEN'S CRICKET WORLD CUP 2005 SOUTH AFRICA

தென்னாபிரிக்காவில் நடைபெறும் மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இரண்டாவது சுற்றுப் போட்டியில் இந்தியா தென்னாபிரிக்காவை நான்கு விக்கெட் வித்தியாசத்தில் வென்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா இம்முறையும் மூன்று ஓட்ட எண்ணிக்கையை பெறத் தவறியது. ஒரு கட்டத்தில் 52 ஓட்டத்துக்கு ஒரு விக்கெட்டை இழந்திருப்பினும் இறுதி 24 ஓட்டங்களுக்குள் ஒன்பது விக்கெட்டையுமிழந்தது. இந்தியா சார்பில் தீபா மாறதி சிறப்பாகப் பந்து வீசி 30 பந்துகளில் ஒரு ஓட்டத்தைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்கு ஆடிய இந்தியாவும் ஆரம்பத்தில் திணறிய போதும் ஆறு விக்கெட்டுக்களையிழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

இன்னுமொரு போட்டியில் சிறிலங்கா, நியூசிலாந்து மகளிர் அணியிடம் தோல்வி கண்டது. அடுத்து அவுஸ்திரேலிய மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் இடையேயான போட்டியில் அவுஸ்திரேலியா 79 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.



தொடர்ந்து இங்கிலாந்து அயர்லாந்து அணிகளுக்கிடையிலான போட்டியில் இங்கிலாந்து 128 ஓட்டங்களால் வென்றுள்ளது. முதலில் ஆடிய இங்கிலாந்து ஆறு விக்கெட் இழப்பிற்கு 221 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய அயர்லாந்து 50 ஓவர் முடிவில் எட்டு விக்கெட்டுக்களையிழந்து 98 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.



விளையாட்டு

## ஒரு நாள் கிரிக்கெட் தொடர் இந்திய அணி இன்று அறிவிப்பு

இந்திய-பாகிஸ்தான் அணிகள் இடையே தற்போது டெஸ்ட் கிரிக்கெட் போட்டித் தொடர் நடைபெற்று வருகிறது. டெஸ்ட் தொடர் முடிந்த பின்னர் இவ்விரு அணிகள் இடையே ஆறு ஒரு நாள் போட்டி கொண்ட தொடர் நடக்கிறது. இதன் முதல் ஒரு நாள் போட்டி வரும் இரண்டாம் திகதி கொச்சியில் நடக்கிறது.

இந்த நிலையில் ஒரு நாள் போட்டித் தொடருக்கான இந்திய அணி இன்று அறிவிக்கப்படுகிறது. பெங்களூர் டெஸ்டின் கடைசி நாள் ஆட்ட முடிவில் இந்திய அணி வீரர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.



ஜப்பானில் சர்வதேச கிராண்ட் சுமோ மல்யுத்தப் போட்டி நடக்கிறது. இதில் பங்கேற்கும் சுமோ மல்யுத்த வீரர்களை படத்தில் காணலாம்.

# காலபந்தாட்டத்தில் கைகலப்பு எட்டுப் பேர் படுகாயம்

கரைதுறைப்பற்று பிரதேச உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் ஏற்பட்ட கைகலப்பில் எட்டுப் பேர் படுகாயமடைந்தனர். நேற்று முன்தினம் மாலை 5.00 மணியளவில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் முள்ளியவளை விநாயகர் விளை யாட்டுக்கழகத்துக்கும் செம்மலை உதயசூரியன் வி.க. இடையே உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே இக் கைகலப்பு ஏற்பட்டது. இதன்போது முள்ளியவளை வித்தியா விளையாட்டுக்கழகம் விநாயகர் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தினருக்கு தடியடிப் பிரயோகம் செய்தனர். இதன்போது படுகாயமடைந்த எட்டுப் பேரில் ஐந்து பேர் மோசமாக படுகாயமடைந்து தொடர்ந்தும் முல்லை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சம்பவ இடத்துக்கு விரைந்த அப்பிரதேச தமிழீழக் காவல்துறையினர் விசாரணை களை மேற்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (20)

# முதல் ஒரு நாள் போட்டிக்கு கொச்சி மைதானம் தயார்

இந்திய- பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான ஒரு நாள் போட்டித் தொடரின் முதல் ஆட்டம் நடைபெறும் கொச்சி மைதானம் தயார் நிலையில் உள்ளதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் ஆடுகளம் மற்றும் மைதானம் குழுவின் தலைவர் வெங்கட் சுந்தரம் தெரிவித்தார். இந்த மைதானம் உலகத்தரத்துக்கு இணையான வசதிகளைப் பெற்றுள்ளது என்றார் அவர். ஒரு நாள் போட்டித் தொடரின் முதல் ஆட்டம் ஏப்ரல் இரண்டாம் திகதி கொச்சி ஜவஹர்லால் நேரு சர்வதேச மைதானத்தில் நடைபெறுகிறது.அதற்காக இந்த மைதானம் தயார் நிலையில் உள்ளது. ஆடுகளமும் மிகச் சிறப்பாக உள்ளது என்றார் வெங்கட் சுந்தரம்.

## இன்றைய கால்பந்துப் போட்டிகள்

எல்லைப் படை மாவீரர் நினைவாகவும், சுனாமியினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட் டப் பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாம் சுற்று ஆட்டத்தில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விபரம் வருமாறு,வன்னி வட்டக்கச்சி விளையாட்டுக்கழகம் எதிர் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த சில்வஸ்ரார் விளையாட்டுக்கழகம் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் எதிர் அளவெட்டி கலைவாணி விளையாட்டுக்கழகம். (41)

## நெடுந்தீவு பிரதேச விளையாட்டுப்போட்டி; ஐந்து புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையேயான தடகளப் போட்டியில் ஆறு புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன.

பெண்களினால் புதிய சாதனைகள் ஐந்து ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் ஆண்கள் பிரிவில் ஒரு சாதனை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பெண்களில் மூன்று களப்போட்டியிலும் இரண்டு தடப்போட்டியிலும் சாதனை ஏற்படுத்தப்பட்டுள்ள வேளையில் ஆண்கள் பிரிவில் ஒரு களப் போட்டியில் சாதனை புரியப்பட்டுள்ளது.

நீளம் பாய்தலில் சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஞா.அருள்ராஜ் முன்னைய 5.61 மீற்றர் என்ற சாதனையை 5.66 மீற்றர் தூரம் பாய்ந்து புதிய சாதனையை ஏற்படுத்தினார்.


இதேபோன்று பெண்கள் பிரிவில் 4x100 மீற்றர் அஞ்சல் ஓட்டப்போட்டியில் முன்னைய 1.07 : 30 செக்கன் என்ற சாதனையை 1.6 : 40 செக்கன் என்ற புதிய சாதனையை சென்ஜோன்ஸ் வி.கழகத்தினர் ஏற்படுத்தினார்கள்.

800 மீற்றர் பெண்களுக்கான ஓட்டப்போட்டியில் முன்னைய சாதனையான 3.19 : 80 செக்கன் என்ற சாதனையை ஸ்ரார் வி.கழக வீராங்கனை 3:07:00 செக்கனில் ஓடி முடித்து புதிய சாதனையை ஏற்படுத்தினார்.

பல்துறை வி.கழகத்தைச் சேர்ந்த ந.கருணகலாதேவி தட்டெறிதல் குண்டெறிதல், ஈட்டியெறிதல் ஆகியவற்றில் புதிய சாதனைகளை ஏற்படுத்தியுள்ளார்.

தட்டெறிதலில் 20:63 மீற்றர் என்ற சாதனையை 22:67 மீற்றர் தூரம் எறிந்தும், குண்டெறிதலில் 7:33 மீற்றர் என்ற சாதனையை 7:38 மீற்றர் தூரம் எறிந்தும் ஈட்டியெறிதலில் 21: 45 மீற்றர் என்ற சாதனையை 23:26 மீற்றர் தூரம் எறிந்தும், புதிய சாதனைகளை ஏற்படுத்தி பலரினதும் பாராட்டையும் பெற்றுள்ளார். (41)

## சிந்தனைக்கு



எமது சொந்தப் பலத்தில் நாம் வேரூன்றி நிற்பதால்,மற்றவர்களின் அழுத்தங்களுக்குப் பணிந்து கொடாமல் எம்மால் தலை நிமிர்ந்து நிற்க முடிகின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 28-03-2005



தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## எது உண்மை?

ஆளும் ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணியினர் ஒருவர் கூறியதாக மற்றொருவர் கூறுவதையோ அன்றி ஒருவர் கூறியதாக ஊடகங்களில் வெளிவருவதையோ இன்று எவருமே நம்பமுடியாது. அவ்வாறு நம்புபவர்கள் இவ் ஆட்சியாளர்களைப் பற்றி புரிந்து கொள் ளாதவர்களாகவே இருக்க முடியும்.

எடுத்துக்காட்டாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜே.வி.பி கூறுவதாக கூறுவதையோ அன்றி ஜே.வி.பி தொடர் பாக அவர் கூறுவதையோ எவருமே நம்ப முடியாது. அதேபோன்று வெளிவிவகாரஅமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஜே.வி.பி கூறியதாக கூறுவதைக் கூட எவருமே நம்பிவிட முடியாது. இதில் சனாதிபதி சந்திரிகா ஜே.வி.பி யினருடன் முரண்பாடு கொண்டவர் என்பதும் கதிர்காமர் ஜே.வி.யின் நண்பர் என்பதும் வேறுவிடயம்.

கடந்த வாரத்தில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர் காமர் சுனாமி அனர்த்தம் தொடர்பான பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படும் எனவும் அதற்கு ஜே.வி.பி எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டாது எனவும் பி.பி.ஸி க்கு வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்திருந்தார். இதன் மூலம் விரைவில் பொதுக்கட்டமைப்பு உருவாகும் சாத்தியமுள்ளது என்பது அவரின் அறிவிப்பாக இருந்தது.

ஆனால் இப்பேட்டி வெளியாகி இரண்டு தினங்களுக்குள்ளேயே கதிர்காமருக்கு இத்தகைய உறுதிமொழி எதையும் அளிக்கவில்லையென ஜே.வி.பி யினர் தெரிவித்துவிட்டனர். இது குறித்து சர்வதேச செய்திச் சேவை ஒன்றிக்குக் கருத்துத்தெரிவித்த ஜே.வி.பி யின் பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் "ஜே.வி.பி உயர் மட்டத்தலைவர்கள் எவரும் இவ்வாறான உறுதி மொழி எதையும் வழங்கவில்லை, எனவும் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக புலிகளுடன் அரசு இணக்கத்திற்கு வருவதை ஜே.வி.பி. எதிர்க்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

அதாவது கதிர்காமரின் கூற்றுக்கள் உண்மைக்கு மாறானவை என்பதே ஜே.வி.பி உறுப்பினரின் அறிவிப்பாகும் ஆகையினால் ஜே.வி.பி யினரின் ஆதரவு பெற்றவர் ஜே.வி.பி யினால் பிரதமர் பதவிக்கு முன்மொழியப்பட்டவர் என்பதன் காரணமாக லக்ஷ்மன் கதிர்காமர் ஜே.வி.பி குறித்துத் தெரிவிக்கும் கருத்துக்கள் அபிப்பிரயங்கள் என்பன உண்மைத் தன்மைபொருந்தியவையாக இருக்கும் என்பதல்ல.

சிலவேளைகளில் ஜே.வி.பி யினர் சிலர் பேச்சு வாக்கில் லக்ஷ்மன் கதிர்காமருக்கு இத்தகையதொரு கருத்தைக் கூறியிருப்பினும் கூட அதனைக் கதிர்காமர் வெளிப்படையாகக் கூறுவதை அவர்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. ஏனெனில் இது அவர்களின் "அரசியல் மூலதனத்திற்கு" பாதிப்பை விளைவிப்பதாகிவிடும் இதனை அடிப்படையாகக் கொண்டுபார்த் தால் கதிர்காமருக்கு அரசியலில் பகிடியும் தெரியாது வெற்றியும் தெரியாது என்றே கொள்ள வேண்டி இருக்கும்.

ஆனால் பேசாததைப் பேசியதென்றும் பேசியதைப் பேசவில்லை எனவும் கூறுவதில் கதிர்காமருக்கு வழிகாட்டியாக இருக்கத் தகுதியானவர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே. அவர் தனிப்பட்ட சந்திப்புக்களில் பேசியவற்றைப் பற்றி மட்டும் முன்னுக்குப் பின் முரணாகப் பேசக்கூடியவர் என்பதல்ல பொதுமேடைகளில் பேசுவதைக்கூட மறுக்கவும் நிராகரிக்கவும் கூடியவர்.

அண்மையில் கூடப் பொது மேடையில் சுனாமி அனர்த்த நிதியாக சர்வதேச சமூகம் இன்னமும் ஐந்து சதம் கூட வழங்கவில்லை என அவர் கூறியிருந்தார். இதனை அவரது குரலிலேயே தொலைக் காட்சிகள்,வானொலிகள் ஒளி ஒலி பரப்புச் செய்திருந்தன ஆனால் இப்பேச்சு ஏற்படுத்திய பாதிப்புக்கள் இப்பேச்சுத் தொடர்பாக எழுந்த கண்டனங்கள் என்பவற்றைத் தொடர்ந்து சனாதிபதி சந்திரிகா அவ்வாறு பேசவில்லை திரிபுபடுத்தப்பட்டுவிட்டது என சனாதிபதி செயலகம் அறிக்கை வெளியிடவேண்டியதாகியுள்ளது.

இம்மறுப்பானது சனாதிபதி ஏதோ பேச்சிற்குச் சொன்னதை எதிர்க்கட்சியினர் பெரிது படுத்திவிட்டனர் என்பது போன்றதாக இருந்தது. ஆனால் சனாதிபதி சந்திரிகாவின் பேச்சுக்கள் தொடர்பாக சனாதிபதி செயலகம் மறுப்பு வெளியிடுவது இது முதல் தடவையல்ல. சனாதிபதி சந்திரிகாவின் பெரும் பாலான பேச்சுக்களுக்கு இவ்வாறான மறுப்புக்கள் வெளிவருவது வழமையானதொன்றே.

ஏனெனில் சனாதிபதி சந்திரிகா தனியாக ஒரு தரப்பினர் தொடர்பாக அன்றி ஒரு விவகாரத்தில் மட்டும் இவ்வாறான குழப்பமான நிலைப்பாட்டைக் கடைப்பிடிப்பதில்லை. எதிர்க் கட்சி யான ஐ.தே.கட்சியுடனும் சரி, தமிழ்தேசியக் கூட்டமைப்புடனும் சரி, ஆளும் கூட்டணிக்கட்சி ஆயினும் சரி இத்தகையதொரு போக்கையே கைக்கொள்பவராவர். இது அவரின் குண இயல்பு போன்றது.

ஆனால் ஆட்சியிலுள்ளவர்கள் இவ்வாறு பேசுவதினால் மக்கள் பெரும் குழப்பத்திற்குள்ளாவது தவிர்க்க முடியாததா கிறது இவர்கள் பேசுவதில் எது உண்மை? எது பொய்? இதில் மறுக்கப்படப்போவது எது? ஏற்கப்படப்போவது எது? என்ற குழப்பம் மக்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது. ஆனால் அதிகாரத்தில் இருப்பவர்களால் இத்தகைய பேச்சுக்கள் தவறுதலாகவோ கோபத்தின் வெளிப்படாகவோ கூறப்படுபவையல்ல. மக்களை குழப்பத்தில் ஆழ்த்தும் நோக்கில் வேண்டுமென்றே மேற்கொள்ளப் படுபவையாகும். ஏனெனில் மக்களைக் குழப்பத்திற்கு உள்ளாக்குவதன் மூலம் பதவியில் நீடிப்பதற்கு இவர்கள் வழி தேடுகின்றனர்.

# 9 அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து இன்று வடமராட்சியில் பேரணி

ஒன்பது அம்சக்கோரிக்கைளை முன்வைத்து வடமராட்சி பொது அமைப்புகளின் ஒன்றியம் இன்று பேரணி ஒன்றை நடத்தவுள்ளது. இது தொடர்பான தமது கோரிக்கைகளை அவ் அமைப்பு வெளியிட்டுள்ளது.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற பேரில் பயன்தரு நிலங்களையும், குடியிருப்புக்களையும், பாடசாலைகளையும் தொடர்ந்து தங்கள் கட்டுக்கோப்பில் வைத்திருப்பதைக் கண்டித்தும்.

தமிழீழத்தின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளை திட்டமிட்டு கொலை செய்வதை உடன் அரசு நிறுத்த வேண்டும்.

கடற்கரைப் பிதேசத்தில் 200 மீற்றருக்குள் கட்டடங்களை அமைக்க அனுமதி மறுக்கும் அதே நேரம் கடற்கரையில் புதிதாக இராணுவ முகாம்களை பலப்படுத்தி வருகின்றமையை கண்டித்தும்.

இராணுவத்தினரின் பாலியல் சேட்டைகள் போன்ற நடவடிக்கைகளையும், அதிகரித்த இராணுவ வாகனங்களின் மூலம் ஏற்படுத்தப்படும் விபத்துக்களையும் கண்டித்தும்.

சுனாமி அனர்த்தம் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்களும் அது சம்பந்தமான நிவாரண நடவடிக்கைகள் மிக மந்தகதியில் நடைபெறுவதனைக் கண்டித்தும்.

கடற்தொழிலாளர்கள் தங்கள் தொழிலை மேற்கொள்ள அனுமதிப்பத்திரம் பெறும் கெடுபிடிகளை மேற்கொள்ளுவதைக் கண்டித்தும்.

உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள குடியிருப்பாளர்களதும் இராணுவம் தங்கி இருக்கின்ற வீடுகளை மீண்டும் குடியிருப்பாளர்களிடம் கையளிக்கக் கோரியும்.

இடைக்கால நிர்வாகத்துக்கான பேச்சுக்களை உடன் ஆரம்பித்து விடுதலைப் புலிகளிடம் கையளிக்கக் கோரியும்.

குடாநாட்டு இராணுவத்தினரின் அடாவடித்தனங்கள் அதிகரிப்பதை நீக்க இராணுவத்தை எம்மண்ணிலிருந்து அகற்றக்கோரியும் இப்போராட்டம் நடத்தப்படுவதாக வடமராட்சி பொது அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (27)

# வாகனத்தால் ஒருவரை மோதிக் கொன்றுவிட்டு தப்பிச்செல்ல முயன்ற பிரதியமைச்சரின் மகன் கைது

வீதியில் சென்றவரை வாகனத்தால் மோதிவிட்டு தப்பிச் செல்ல முயன்ற மின்சக்தி பிரதியமைச்சர் குமாரவெல்கமவின் மகனும் வேறு நான்கு பேரும் நேற்று கொழும்பு மேல்நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களை அடையாள அணி வகுப்பின் பின்னர் எதிர்வரும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். நேற்று இவர்கள் மின்சார சபையின் வாகனம் ஒன்றில் சென்றவேளை வீதியில் சென்ற ஒதுவர் மீது மோதியதில் அவர் ஸ்தலத்திலேயே பலியானார். மற்றும் 04 பேர் காயமடைந்தனர். இச்சம்பவத்தையடுத்து அவர்கள் தம்பிச்செல்ல முயற்சித்த வேளை பம்பலப்பிட்டி பொலிசாரால் கைது செய்யப்பட்டு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். இதனைத்தொடர்ந்து இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிடப்பட்டுள்ளது. வாகனத்தைச் செலுத்திய வேளை இவர்கள் மதுபோதையில் இருந்தார்களா என்பது தொடர்பாக பொலிசாருக்கு விசாரணைகளை நடத்துமாறு நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. (32)

# சுனாமி நிவாரணப்பணி தாமதத்திற்கு அரச அதிகாரிகள் மீது பழிபோடுகிறார் அமைச்சர்

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தினால் உரிய பணிகள் முனனெடுக்கப்பட்ட போதிலும் அரச அதிகாரிகள் உரிய முறையில் அதனை செயற்படுத்தவில்லை. ஆகையால் தான் அரசின் சுனாமி நிவாரணப் பணிகளை ஒழுங்காக செயற்படுத்த இயலவில்லையென அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். நேற்று காலி மாவட்டத்திற்கு விஜயம் செய்த வேளை அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் தொடர்ந்து கருத்துவெளியிடுகயைில்; அரச அதிகாரிகள் செய்யாத காரணத்தினால் அதன் தாக்கம் அரசிற்கு ஏற்பட்டுள்ளதென தெரிவித்தார். (32)

# மின்சாரசபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் குறித்த பிரேரணையை நிராகரிக்க வேண்டும்

## - அமைச்சர்களிடம் தொழிற்சங்கங்கள் கோரிக்கை

"அரசாங்கத்தின நாளைய விசேட அமைச்சரவைக் கூட்டத்தின்போது மக்களின் நலத்தைக் கருத்திற் கொண்டு அங்கு செல்லும் அமைச்சர்கள் அனைவரும் மின்சாரசபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்பான பிரேரணையினை நிராகரிக்க வேண்டும்" என தொழிற்சங்கங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. நேற்று கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்துத்தெரிவித்த மின்சார சபையினதும் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தினதும் இணைந்த தொழிற் சங்கக் கூட்டமைப்பின் பேச்சாளர் றஞ்சன் ஜெயலால் கருத்துத் தெரிவிக்கையில்; மின்சார சபையினையோ அல்லது பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தையோ தனியார் மயப்படுத்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கு எந்த தார்மீக உரிமையும் கிடையாது. இந்த அரசாங்கம் தொழிலாளர் வர்க்கத்தினால் ஆட்சிக்கு கொண்டு வரப்பட்ட அரசாங்கம் என்பதை நாளை அங்கு அமரும் அமைச்சர்கள் அனைவரும் நினைவில் கொள்ளவேண்டும். எம்முடன் சேர்ந்து 134 தொழிற்சங் கங்கள் இந்த விடயத்தைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கின்றன. நாளை எம்மைப் பொருட்படுத்தாமல் அமைச்சரவை தீர்மானம் எடுக்கு மானால் இந்த அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான ஆரம்ப நடவடிக் கைகள் மக்களின் பேரால் தொழிற் சங்கங்கள் மேற் கொள்ளும் என்றார். (32)

# க.பொ.த. [சா/து], [உ/து] சித்தியடைந்தோருக்கு அரச துறையில் நியமனம் வழங்க நடவடிக்கை

## -பிரதி நிதியமைச்சர் தெரிவிப்பு

க.பொ.த. (சா/த), க.பொ.த (உ/த) பரீட்சையிலும் சித்தியடைந்தவர்களுக்கு அரச துறையில் நியமனங்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் மார்ச் மாதம் 31ஆம் திகதி சனாதிபதி தலைமையில் ஆரம்பமாகவுள்ளதாக பிரதியமைச்சர் கூறியுள்ளார்.

இதற்கமைய தாதிமார்களாக 5000 பேருக்கும், வங்கித்துறையில் 1500 பேருக்கும், ஆசிரியர்களாக 1800 பேருக்கும் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. இவ் ஆண்டு பூர்த்தியடைவதற்குள் 30 ஆயிரம் பேருக்கு அரச துறையில் தொழில் வாய்ப்புக்கள் வழங்குப்படுமென பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

# மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை ஒருவருடமாகியும் அரசு நிறைவேற்றவில்லை

## -எதிராக ஐ.தே.கட்சி ஆர்ப்பாட்டம்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியமைத்து ஒருவருடம் நிறைவடைகின்ற போதிலும் நாட்டு மக்களுக்கு வழங்கிய உறுதி மொழிகளை அது நிறைவேற்றாமையைக் கண்டித்து நாடு முழுவதும் தொடர்ச்சியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்த பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

அதன்படி மேல் மாகாணத்தில் நடத்தப்படவுள்ள எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஐந்தாம் திகதி பிற்பகல் கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

# பொதுக்கட்டமைப்பு உருவாக்குவதில் அரசு உறுதியாக உள்ளதாம்!

## -ரூபவாஹினியில் சனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

புலிகளுடன் இணைந்து அரசு பொதுக்கட்டமைப்பு ஒன்றை நிறுவுவதற்கு உறுதியாக இருக்கின்றதென சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

நேற்று ரூபவாஹினி தொலைக்காட்சியில் உரையாற்றிய வேளை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்; உள்நாட்டில் வருகின்ற எந்த ஓர் எதிர்ப்பையும் சமாளித்து இக்கட்டமைப்பை அமைப்பதற்கு உறுதியாக உள்ளேன்.

சுனாமி ஏற்பட்டவுடன் அடிமட்ட உதவிகளை அரசு செய்துள்ளது. சொந்தப்பணத்தில் வேலைத் திட்டங்களை செய்துள்ளது. இதற்கடுத்தகட்டமாக நிரந்தரப் புனரமைப்புச் செய்யவேண்டிய கட்டம் ஏற்பட்டுள்ளது. அதற்கு வெளிநாடுகள் உதவி வழங்குவதாக உறுதியளித்துள்ளன. இவ் வாய்ப்புக்காக நாங்கள் ஒரு கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதற்காக இக்கட்டமைப்பு அவசியமானது.

அத்துடன் அடுத்த கட்ட சமாதான முயற்சிகளுக்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கும். இலங்கையில் இருபது வருடகாலமாக இருந்த பயங்கரவாத நடவடிக்கைகள் தற்போது தணிந்துள்ளது. இந்நிலைமையை சர்வதேச நாடுகள் வரவேற்றுள்ளன. எனவே இதற்கு மத்தியில் அந்த நாடுகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர்அம்சமே பொதுக கட்டமைப்பு இது அவசியமென அரசு உணர்ந்துள்ளதென மேலும் தெரிவித்தார். (32)

### சிறிலங்கா...

விடுதலைப்புலிகளுக்கு தெரிவித்தனர்.

இதனால் விடுதலைப்புலிகளும், மக்களும் சேர்ந்து காவற் கடமையில் ஈடுபட்டு வந்தனர். இவ்வேளையில் நேற்று முன்தினம் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. இரவு வேளைகளில் நடவடிக்கையில் ஈடுபடும் இலங்கைப் படைகளின் சிறப்பு படையணியின் நடவடிக்கையே எனச் சந்தேகிக்க தோன்றுகின்றது. இது அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல். இச்சம்பவத்தை நாங்கள் வன்மையாகக் கண்டிப்பதோடு, இதனால் ஆழ்ந்த சோகத்தில் இருக்கும் அவ்விரு குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### ராணுவ....

பாடுகள் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் இரண்டு குழுக்கள் விசாரணை நடத்தி வருகின்றன என்றும் அவர் கூறினார்.

### வடமராட்சி....

பொது அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் கையளிக்கவுள்ளனர்.

இதேவேளை இன்றைய கண்டனப்பேரணியில் கலந்து கொள்ள ஏதுவாக மதியம் வரை வர்த்தக நிலையங்களை மூட வடமராட்சியிலுள்ள வணிகர் கழகங்கள் முடிவு செய்துள்ளன. அதேபோன்று அனைத்து மீனவச் சங்கங்களும் தொழிலுக்குச் செல்வதை இடைநிறுத்தி இப்பேரணியில் கலந்துகொள்ளவுள்ளதாக மீனவ சமாச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே இக்கண்டனப் பேரணியில் கலந்துகொள்ள ஏதுவாக துறைமுக தொழிலாளர்களும் கடமைகளிற்குச் செல்ல மாட்டார்களென அறிவிக்கப்பட்டுள்ளது. (27)

### கதிர்காமர்...

கூறுகிறது. அமைச்சர் கதிர்காமர் பி.பி.சி யில் நடைபெறும் ஹாட் டோக் நிகழ்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில், யார் எது கூறினாலும் ஜே.வி.பி தன்னிடம் உறுதி மொழி கொடுத்திருப்பதாகவும் ஆகவே மற்றவர்களுடைய பேச்சுக்களை பொருட்படுத்தத் தேவையில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளமை தெரிந்ததே. (32)

-இரு வெவ்வேறு சம்பவங்களில்-

# செட்டிகுளம் பகுதியில் இருவர் வெட்டிக்கொலை

(வவுனியா செய்தியாளர்)

செட்டிகுளம் பகுதியில் வெவ்வேறான இரு சம்பவங்களில் இருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் செட்டிகுளம் மெனிக்பாம் குடியேற்றத் திட்டத்தில் கே. சாமிக்கண்ணா (வயது - 53) என்பவரை அவரது மருமகன் வெட்டிக் கொலை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கொலைச் சந்தேக நபர் தலைமறைவாகி உள்ளமையால் அவரைக் கைது செய்யுமாறு வவுனியா மாவட்ட நீதிபதி மா. இளஞ்செழியன் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அன்றையதினம் இரவு 11.00 மணியளவில் வீரபுரம் பகுதியில் சிதம்பரம் வேலுசாமி (வயது - 44) என்பவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தில் இறந்தவரின் மனைவியும் சந்தேகநபரும் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட சந்தேக நபராகிய செல்லையா செல்லத்துரை பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்பிலுள்ள இவரைப் பார்வையிட்ட வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (10,21)

### ராணுவமுகாமருகே...

இந்த முகமூடி கைப்பற்றப்பட்டதாக இராணு வத்தரப்பு தெரிவித்துள்ளது.

இது தமிழீழ விடுதலைப்புலிகளால் பயன்படுத்தப்படுவது எனக்கூறும் இராணுவம் இது தொடர்பில் போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டுள்ளது.(32)

### சர்வசன...

டார்கள். இந்த வாக்கெடுப்பானது அரசியல் விளையாட்டு வேலை. அரசியல் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளுகிற நடவடிக்கை. இனப்பிரச்சினைக்கு நர்ந்தரத் தீர்வை உருவாக்காத வரை தமிழ் மக்கள் இதுபோன்ற எந்த ஒரு சர்வசன வாக்கெடுப்பிலும் பங்கேற்கமாட்டார்கள். இருபது ஆண்டு கால யுத்தத்தாலும் கடந்த டிசம்பர் 26 ஆழிப்பேரலையாலும் பெரும் பாதிப்புகளுக்குள்ளாகி சுமைகளோடு வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காத நிலையில் எப்படி வாக்கெடுப்பில் பங்கேற்க முடியும்? ஆழிப்பேரலை மீள் கட்டமைப்புக்கு உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்படாமல் வாக்கெடுப்புக்கு அரசு பணத்தை செலவிடுவது வீண் விரயமே. 1994 ஆம் ஆண்டிலேயே சனாதிபதியின் அதிகாரம் குறித்து மக்கள் தீர்ப்பளித்துவிட்டார்கள். மீண்டும் எதற்காக இன்னொரு வக்கெடுப்பு? தமிழீழ விடுதலைப்புலிகளுடன் விவாதிக்காமல் இதுபோன்ற வாக்கெடுப்புகளை நடத்துவது அர்த்தமற்றது என்றார் அவர். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இது குறித்து கூறியதாவது: தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வு காணாத நிலையில் வாக்கெடுப்பு நடத்துவது என்பது தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் முற்றிலும் அர்த்தமற்றது. அத்துடன் அரசாங்கமானது மக்கள் முன் வைக்க உள்ள வாக்கெடுப்பு தொடர்பான விடயங்களும் தெளிவானதாக இல்லை என்று அவர் கூறியுள்ளார். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலர் ஹசன் அலி இது குறித்து கூறியுள்ளதாவது: சந்திரிகா அரசு கூறுகிற இந்த சர்வசன வாக்கெடுப்பு குறித்து முஸ்லிம் மக்கள் மத்தியில் ஒருவித குழப்பமான நிலையே நீடிக்கிறது. அரசியல் விளையாட்டுகளில் இதுவும் ஒன்றே என நான் கருதுகிறேன். இதை நாங்கள் ஏற்கமுடியாது. நிறைவேற்று அதிகார முறை ரத்து மற்றும் சமஷ்டி உள்ளிட்ட எதுவானாலும் மக்களுக்கு உரிய விளக்கத்தை அரசு அளிக்காதவரை அதை ஏற்க இயலாது. இந்த வாக்கெடுப்பு குறித்து சனாதிபதி மீள் பரிசீலனை செய்வதோடு தீவகத்தின் இனச் சிக்கலுக்கு உரிய தீர்வு காணுவதில் அக்கறை செலுத்த வேண்டும் என்றார் அவர்.

### தீர்க்கமான.....

புக்களை, இன்றுள்ள அரசியல் நிலைமைகளை, களநிலைமைகளை சர்வதேச சமூகத்திற்கு தெளிவாகவும், நேரடியாகவும் எடுத்துச் சொல்வதாகும். முக்கியமாக பேச்சுவார்த்தைகள் தேக்கமடைந்து நெருக்கடி நிலைக்கு உட்பட்டு மக்கள் முழு அளவில் ஏமாற்றமடைந்துள்ள இச்சூழலில் குறிப்பாக, சுனாமியால் தாயக பிரதேசம் பேரழிவைச் சந்தித்து நின்கின்ற இந்நிலையில், சர்வதேச சமூகம் எமது மக்களுக்கு செய்ய வேண்டிய மனிதாபிமான உதவிகள் பற்றிய கோரிக்கையை முன்வைக்கும் நோக்குடன்தான் இப் பயணத்தை மேற்கொண்டுள்ளோம்.

இப்பயணத்தின்போது ஐந்தாவது நாட்டிற்கு வந்துள்ளோம். நோர்வே, சுவீடன், ஜேர்மனி, பெல்ஜியம் ஆகிய நாடுகளுக்குச் சென்றுவிட்டு சுவிற்சர்லாந்து வந்துள்ளோம் அனைதது நாடுகளிலும் அங்குள்ள வெளியுறவுத் துறையினரையும், அங்கேயுள்ள பொருளாதார அபிவிருத்திக்கான அமைச்சர்களையும், வெளியுறவு அமைச்சர்களையும் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களைச் சேர்ந்த உயர் பிரதிநிதிகள் எனப் பலரையும் சந்தித்து நிலைமைகளைத் தெளிவாக்கி வருகின்றோம்.

ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்து பலரைச் சந்திக்கின்றபோது நாங்கள் உணர்ந்து கொண்டது அரசு தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்ற தவறான பிரச்சாரங்கள் சர்வதேச சமூகத்தின் மத்தியில் எவ்வளவு தூரம் ஆழமாகப் பதிய வைக்கின்றது என்பதை அவர்களுடைய கருத்து வெளிப்பாடுகள் மூலம் எம்மால் உணரக் கூடியதாக இருந்தது இப்பயணத்தின் ஊடாக நேரடியாக அவர்களுக்குள்ள சந்தேகங்கள், அவர்களுடைய எதிர்பார்ப்புக்களுக்கு நாங்கள் தெளிவாக உண்மை நிலைப்பாடுகளை எடுத்து விளக்குகின்றபோதுதான் அவர்களுக்கு அங்குள்ள நிலைமைகளை சரியாகப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

அரசு தவறான பிரச்சாரங்களைத்தான் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. கள நிலைமைகள் பற்றி எமது மக்களுடைய நிலைப்பாடுகள்; எதிர்பார்ப்புக்கள் பற்றி தற்போது ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடிகள் பற்றி எல்லாம் ஒரு தவறான நிலைப்பாடுகளையே சர்வதேச அளவில் எடுத்து விளக்கியுள்ளனர்.

நாம் எமது மக்களுடைய நியாயமான எதிர்பார்ப்புக்கள், கள நிலைமைகள், மனிதாபிமான நெருக்கடிகள் பற்றி எடுத்துக் கூறியுள்ளோம். அதனை உரிய கரிசனையோடு அவர்கள் உள்வாங்கிக் கொண்டார்கள். நிச்சயமாக எதிர்காலத்தில் தமிழ் மக்களுடைய அரசியல் முன்னெடுப்புக்களுக்கு இச்சர்வதேச சமூகம் ஒரு பக்கபலமாக இருக்கக்கூடிய சூழலை நோக்கி முன்னேற்றமடைந்து கொண்டு வரக்கூடிய சாத்தியப்பாடுகளை எங்களால் உணரக்கூடியதாக இருந்தது. சுனாமிக்குப்பின் சர்வதேசத்திடமிருந்து பெருமளவு உதவிகளை சிறிலங்கா அரசு பெற்றுக் கொண்டு எமது தாயகப் பகுதிக்கு எவ்வித உதவிகளும் பகிர்ந்தளிக்கப்படாத நிலையில் சர்வதேச ரீதியில் அவர்கள் புலிகளுடன் ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்திருப்பதாகவும், அது தமிழ் மக்களுக்கும் தாங்கள் பகிர்வதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருப்பதாகவும், ஒரு செய்தியை பரப்பி வருகின்றார்கள். இதனுடைய உண்மை நிலையை எடுத்து விளக்கும் நோக்குடன் தான் நாங்கள் இவ் விஜயத்தை மேற்கொண்டுள்ளோம். அந்த வகையில் எமது பயணம் மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. மேலும் பல நாடுகளுக்கு செல்லவுள்ளோம். இன்று சுவிற்சர்லாந்தில் இருந்து ஏனைய நாடுகளுக்குச் செல்லவுள்ளோம்.

நாங்கள் சர்வதேச சமூகத்திற்கு எடுத்து விளக்குகின்ற போது அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். எமது தலைவர் இவ்வளவு பொறுமை காப்பதை நினைத்து நாங்கள் ஆச்சரியப்படுகின்றோம். என்று கூட பல நாட்டுப் பிரதிநிதிகள் எங்களோடு பேசுகின்ற போது கூறினார்கள். அந்தளவிற்கு தாயகத்திலே நடைபெறுகின்ற தாக்குதல்கள் யுத்த நிறுத்த உடன்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு ஏற்படுத்தப்படுகின்ற நெருக்கடிகள் எல்லாவற்றையும் அநேகமானோர் புரிந்து கொண்டுள்ளனர்.

உண்மையில் தலைவர் மிகவும் பொறுமை காக்கிறார். முடிந்தளவு உச்ச பொறுமையை நாங்கள் கடைப்பிடிக்கின்றோம் என்று தான் நான் கருதுகின்றேன். மட்டக்களப்பிற்குச் சென்ற போதிலும்,எமது மக்கள் புலம்பெயர் நாடுகளுக்கு வருகின்ற போதும் எமது மக்கள் கேட்கின்ற கேள்வி அது தான். நீங்கள் இனியும் ஏன் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள் இப்படியே விட்டுக் கொண்டிருந் தால் எமது போராளிகள், பொறுப்பாளர்கள் எல்லோரையும் இழந்து கொண்டிருக்க முடியாது என ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றார்கள். உண்மையும் அது தான் முக்கியமான கட்டத்தில் நாங்கள் தொடர்ச்சியாக சீண்டப்படுவதும் எங்களுடைய விடுதலை அமைப்பையும், மக்களையும் பலவீனபடுத்துகின்ற முயற்சிகளில் தொடர்ந்து தீவிரமாக செயற்படுவார்களேயானால் நிச்சயமாக நாங்கள் மிக விரைவில் ஏதோ ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவோம். இறுதியாக மாவீரர் தின உரையில் தலைவரால் மிகத் தெளிவாக எமது நிலைப்பாடுகள் தெளிவுபடுத்தப்பட்டது. அதற்கு பின்னர் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் எமது தாயகப் பகுதியில் ஏற்பட்ட போது நாங்கள் அதனை எதிர் கொள்ள வேண்டியவர்களாக இருந்தோம். அக் கட்டத்தில் எமது தலைவர் முன்னுரிமைகொடுத்து எமது மக்களுடைய மீட்புப் பணி மனிதாபிமான பணி அவர்களுடைய மறுவாழ்வு பணிக்கு நாங்கள் உடனடியாக பரிகாரம் தேட வேண்டியவர்களாக இருந்தோம் தலைவர் அதற்கு முதன்மை கொடுத்தார்.

இவற்றை எல்லாம் சர்வதேச சமூகத்திற்கு எடுத்து விளக்கினோம். அரசு உண்மையில் சமாதானச் சூழலையோ, அமைதிச் சூழலையோ எமது மக்கள் ஒரு தீர்வை பெறுகின்ற நியாய பூர்வமான முயற்சிகளையோ அவர்கள் ஏற்றுக் கொள்ளாத ஒரு தன்மைதான் அங்கே இருக்கிறது. அவர்கள் சமாதான சூழலை சீர்குலைத்து புலிகளைச் சீண்டி அங்கே ஒரு யுத்த நெருக்கடியை ஏற்படுத்தி சர்வதேச அளவில் புலிகள் மீதும் தமிழ் மக்களுடைய நியாயமான அபிலாசைகள்,கோரிக்கைகள் அவர்களுடைய உரிமைப் போராட்டத்தை களங்கப்படுத்தும் நோக்குடன் தான் பல காரியங்களைச் செய்து வருகின்றார்கள். இவ் விடயத்தில் எமது தலைவர் நிதானமாக முடிவுகளை எடுத்து காய்களை நகர்த்தி வருகின்றார் என்பதை சமூகம் புரிந்து கொள்ளுகின்ற சூழல் மிக விரைவில் வரும் என்பதை எங்களால் உணரக் கூடியதாக இருக்கிறது.

தாயகத்தில் ஒரு பெரிய நெருக்கடியான சூழல் தான் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்றது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் எமது ஆதரவாளர்கள், போராளிகள், பொறுப்பாளர்கள் தொடர்ச்சியாக கொல்லப்படுகின்ற நிலைமை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இதற்கு மிக விரைவில் நாங்கள் முற்றுப் புள்ளி வைக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். நிச்சயமாக எமது தலைவர் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கின்ற காலம் நோக்கி நெருங்கி வருகின்றது என்று தான் நான் கருதுகின்றேன் என்றார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது